Registered No. M. 873.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15௳யில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 3. | 1912௵ அக்டோபர்௴ 15௳<br>பரிதாபி௵ புரட்டாசி௴ 31௳ | பகுதி 6. |

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

# பொருளடக்கம்.

## (CONTENTS.)


1. ஸ்ந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்—ப. நா. க௪௫

Instruction to Occultists—By P. Narayana Iyer.

2. ஸ்ரீமாந் கர்னல் ஆல்காட் என்பவரின் சரித்திரம்—ப.நா. க௭௪

A Short Sketch of the life of Colonel Olcott By P. Narayana Iyer.

3. ஸ்ரீ சடகோபர் வைபவம்—மு. இராகவன். க௭௫

The Greatness of the saint, Sri Satakopar. By M. Raghaviengar.

4. சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம் எஸ். சாமிநாதையர். க௮க

Sumathi, a novel—By S. Swaminatha Iyer.

5. இராமாயண கதாபுருஷர்களின் குணநிசயங்கள் பி எஸ். ஸுப்ரஹ்மண்ய ஐயர். க௮௫

Personnel of the Ramayana—By P. S. Subramanya Iyer.

6. புத்தக வரவு—பத்திராதிபர். க௮௯

Review of books—Editor.

7. சமாசாரம்—பத்திராதிபர். கO

News—Editor.

8. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.

Patanjala Yoga Sutra.

ADVERTISEMENT.

அறிவிப்பு.

உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், ரூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தரூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதியவிலை. |
|---|---|---|
| | ரூ அ ப | ரூ அ ப |
| ஈசோபநிஷத் | 1—8 —0 | 0—8 —0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0 —0 | 1—8 —0 |
| முண்டகம் | 2—8 —0 | 1—0 —0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில் | 3—8 —0 | 1—8 —0 |
| தைத்திரீயம் | 6—0 —0 | 2—0 —0 |
| ரூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4 —0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.

ரிடைர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 பிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

**NOTICE.**

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy, Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ஷை | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரமஹ்ஞாந சபை | 0-0-1 |
| தாசவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி ப்ரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

233

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. } 1912ஸு அக்டோபர்மீ 15உ பரிதாபிஸு புரட்டாசிமீ 31உ } பகுதி 6.

## ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்.*

ஸந்மார்க்க முறையை அறிதல், அஃதை அநுஷ்டித்தல்.

சந்மார்க்க முறையில் பயில்கின்றவர்கள் தாங்கள் அநுஷ்டிக்க வேண்டியதைப்பற்றிய வியக்தமான விவரங்கள் வேண்டுமென விரும்புகிறார்கள். அவர்களை உத்தேசித்து அடியில் கண்ட விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன.

1. சந்மார்க்கம் இன்னதென அறிதலுக்கும் அஃதை அநுஷ்டித்தலுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். அநுஷ்டான முறையில் நேரிடும் தடைகளை முன்னரே அறிந்து கொள்ளல் வேண்டும்.

2. சந்மார்க்கம் இந்தன்மையதென அறிதல் இலகுவாம். இதை அறிய விரும்புகிறவனின் லக்ஷணம்: சாதாரணமான அறிவும், தத்துவ ஆராய்ச்சியில் விருப்பமும், சுத்தமான வாழ்வும், பிறர் நலம் பயக்கும் கருமம் செய்தலில் அவாவும், பிறரிடமிருந்து பெறுதலை விடப் பிறருக்குக் கொடுத்தலில் ஸந்துஷ்டியும், பிறர் பொருட்டுத்

* இந்த விஷயங்கள் சந்மார்க்க முறையில் பயிலுகின்றவர்களுக்கு மிகவும் சாதகமானவை. மாதாஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் தம்முடைய சிஷ்யர்கள் தினந்தோறும் அநுஷ்டிக்கும்படி அருளியவைகளின் சுருக்கம் இவை.

தன்னுடைய சுகங்களைத் தியாகம் செய்வதில் பிரியமும், ஸத்யம், சீலம், ஞாநம் இவைகளை உள்ளபடி உணர்தலில் தீவ்ர பிரியமும், உள்ளவனாய் இருத்தல் வேண்டும். இவனே பிரஹ்மக்ஞாநியாவான். இவனே பிரஹ்மக்ஞாந தர்சநத்தை அறிதலுக்குத் தகைமையுடையவனாவன்.

3. சன்மார்க்கத்தில் பிரவேசித்து ஒழுகுகிறவன் நலம் புரிதல் இன்னதென சாக்ஷாத்தாய் அறிதலும் நல்லது இது, தீயது இது என உள்ளபடி உணர்தலும், விரும்பிய நலத்தைச் செய்தலுக்கு ஏராளமான சக்தியைப் பெறுதலும், அதாவது, வெளிப்பார்வையில் ஒரு சிறு விரலைக் கூட அசைக்காமல் உலகத்திற்குப் பெரிய நலம் செய்யும் தகைமையைப் பெறுதலும், இவை போன்ற ஸம்பத்துக்களை அடைவான்.

4. துவக்கத்தில் சிஷ்யன் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். குரு சிஷ்ய சம்பந்த முறையில் சிஷ்யனுக்காக குரு வகிக்கும் உத்தரவாதம் வரம்பு கடந்து மிகவும் பெரிதானது. வெளிப்படையாய் உபதேசித்தாலும் ரஹஸ்யமா யுபதேசித்தாலும், பெரிய விஷயத்தை உபதேசித்தாலும அற்ப விஷயத்தை உபதேசித்தாலும், குரு தன் உத்தரவாதத்தைத் தவிர்க்க வொண்ணாது. உண்மையாக குருவானவன் சிஷ்யனை அங்கீகரித்து அவனுக்கு உபதேசிக்க ஆரம்பித்தது முதல் அவனுக்கு யாதேனுமொரு சக்தியை அதாவது ஒரு சித்தியைக் கற்பித்தது முதல் முடிவுவரையில், அதாவது, சிஷ்யனானவன் தீக்ஷைபெற்று மஹாத்மாவாகத் தானுமாகி, பின் தானும் ஒரு குருவாக அமையும்வரை, (பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், என்ற எந்த லோகத்தைப் பற்றியதாக அந்த சித்தி யிருப்பினும்) குருவானவன் சிஷ்யனுடைய எல்லாப் பாபங்களினுடைய உத்தரவாதத்தையும் தன் தலைமேல் சுமக்கிறான். செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாமல் விடுதலாலும், செய்யத் தகாததைச் செய்தலினாலும் மேற்கண்ட பாபங்கள் இருவகையாக ஏற்படும். எவ்வகைத்தாயினும் குருவானவன், சிஷ்யனுடைய இருவகைப் பாபங்களுக்கும் உத்தரவாதியாவான். இக்காரணத்தினால் குருசிஷ்ய சம்பந்தத்தை ஞாநிகள் இலகுவில்ஏற்

றுக் கொள்ளார். ஏழு வருஷகாலம் 14 வருஷகாலம் குருவானவர் சிஷ்யனைப் பல சோதனைகளால் பரீக்ஷித்து அதன் மேல் அவனை அங்கீகரிக்கிறார். பிரச்னோபநிஷத்தில் கூறியுள்ளபடி 6 ரிஷிகள் தங்களை சிஷ்யராக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மஹாத்மாவாகிய பிப்லாதரை மிகவும் வணக்கத்துடன் பிரார்த்தித்தார்கள். அதற்கு பிப்லாதர், "தபஸ், பிரஹ்மசர்யம், சிரத்தை இவைகளின் ஒரு வருஷ அப்பியாசத்தால் தூய்மைபெற்று வாருங்கள், அதன் மேல் அங்கீகரிப்பேன்" என வாக்களித்தார். சிஷ்யர்கள் ஏற்கனவே ரிஷிகளாயிருப்பினும் (ஞானாப்யாஸத்தில் பயின்றவர்கள்) குரு சிஷ்ய சம்பந்தத்தைப் பெறுதலுக்கு பிப்லாதா உடன்பட்டாரில்லை. ஒரு வருஷப் பரீக்ஷையின் மீது அங்கீகரிக்கும்படியாக ஏற்பட்டது. சாந்தோக்யோபநிஷத்தில் அக்ஷிணி புருஷ வித்யையை இந்திரன் பிரஹ்மாவிடமிருந்து உபதேசம் பெறுதற்கு 101 வருஷம் காத்திருந்தான் என்று கூறியுள்ள விஷயமும் இங்கு கவனிக்கத்தக்கது. சன்மார்க்க முறையில் உபதேசம் பெறுதல் இலகுவான கார்யமன்று. சரியான ஞானஸம்ஸ்காரம் பெறாதவன் இதில் பிரவேசித்தலுக்கு அருகனல்லன்.

5. சன்மார்க்க முறையை அநுஷ்டித்தல் என்பது சித்திகளை யுண்டுபண்ணும் தகைமையைப் பெறுதலு மன்று, அவைகளைப் பெறுதலுக்காகவு மன்று. பிரகிருதி சம்பந்தமான சில குப்த விஷயங்களைத் தெரிந்துகொண்டு அப்பியஸித்து சித்திகள் விளையாடுதல் ஒரு பெரிய கார்யமன்று; அது சன்மார்க்கமுறையைக் காட்டிலும் இலகுவானது. சித்திகள் விளையாடுகிறவன் தனது காமம் லோபம் கோபம் முதலிய கீழான சுபாவங்களைப் பிரயோகித்து சில சக்திகளை உண்டுபண்ணிக் கொள்ளுவான். கறுவித்யை இது (Black Magic) கீழான சூன்யவித்யை இது. ஆனால் சுறுவித்யைக்கும் சன்மார்க்கவித்யை (White Magic) க்கும் வித்தியாஸம் அந்த வித்யையை அநுஷ்டிக்கும் நோக்கத்தைப் பொருத்து ஏற்படுகிறது. சுயலாபம் கருதி யாதேனு மொரு சித்தியை இச்சிப்பானாகில் அது கறுவித்யை யாகும். மாசற்ற மகம் பெறாத சூக்ஷ்மமான சித்திகளான சக்திகளை ஒருவன் பிரயோகிப்பானாகில் அவை சூன்யமாக மாறிக் கொடிய தீமைகளையுண்டுபண்ணும் இயல்பினவாக

முடியும். பிரகிருதி சம்பந்தமானவும், கீழான பிராணிகள் சம்பந்தமுமான சிலசக்திகளைக் கறுவித்யை அப்பியஸிக்கிறவனும், சந்மார்க்க வித்யையை அப்பியஸிக்கிறவனும், இருவரும் அறிந்து பிரயோகம் செய்யலாம். இஷ்டமான சித்திகளை இருவரும் புரியலாம். இவைகள் இவ்விருதிறத்தாருக்கும் பொதுவானவை. ஆனால் தேவாத்ம சக்திகள் (The forces of spirit) மாசற்ற மநத்தினருக்குத்தான் வசமாகும். இது தான் சந்மார்க்க முறையில் நடைபெறுகிறவரின் யோக்கியதையாகும்.

6. சந்மார்க்க முறையை அப்பியஸிக்கிறவன் எவ்விதமான யோக்கியதைகளை உடையவனாக இருக்கவேண்டும்? எவ்வித அநுஷ்டாநங்களைச் செய்யவேண்டும்? அவன் எவ்விதம் ஒழுகவேண்டும்? ஆனால் சந்மார்க்கமுறையில் பிரவேசித்துத் தான் அவன் இவைகளை அறியக்கூடும். ஆழத்தி லிறங்கினலல்லாது ஒருவன் நீந்தமுடியாது. பூர்ணமாய் வளரப்பெற்ற இரக்கையும், ஆகாசமும், காற்றும், அதை நம்பிப் பிரவேசிக்கும் சக்தியும் இருந்தாலல்லாது பக்ஷி பறக்க இயலாது. தனக்குத் தீங்கு செய்துகொள்ளாமலும் பிறருக்குத் தீங்கு விளைவிக்காமலும் இருபுறமும் முனையான கத்தியை எடுத்து ஒருவன் விளையாடுவதற்குமுன், ஆரம்பத்தில் கூர் மழுங்கிய கத்தியைக்கொண்டு பழகவேண்டும்.

7. கறுமார்க்கத்தில் நழுவி விழாமல் சாவதாநமாய் சந்மார்க்க முறையில் பயில விரும்புவோன் ஆசரிக்க வேண்டிய சில உண்மைகள் அடியில் விவரிக்கப் பெற்றிருக்கின்றன.

(1) ஞாந உபதேசம் பெறுதலுக்கும், தியாநத்திற்கும் ஸ்தலம் சுத்தமாக இருத்தல் வேண்டும். தனிமையாய் இருக்கவேண்டும். மநத்தைச்சிதறும்படியாகச் செய்விக்கக்கூடியபதார்த்தங்களிலொன்றும் அவ்விடம் இருக்கக்கூடாது. அவ்விடம் மநத்தை உற்சாகப்படுத்தக்கூடியதாக விருக்கவேண்டும். ஸப்த வர்ணங்களில் உயர்நல மமைந்த பஞ்சவர்ணங்கள் வட்டம் வட்டமாக அவ்விடத்தில் அமைத்திருத்தல் வேண்டும். தீய பாவங்கள், தீய எண்ணங்கள் அவ்விடத்தை அணுகாமல் இருக்கச் செய்யவேண்டும். அவ்விடத்தைப் பற்றிய ஸ்தூல சூக்ஷ்ம ஆகாசங்கள் நிர்மலமாய் இருத்தல் வேண்டும். (இன்னும் வரும்.)

ப. நாராயண ஐயர்.

# ஸ்ரீமாந் கர்னல் ஆல்காட் என்பவரின் சரித்திரம்.

இப்போது உலகமெங்கும் பரவிப் பல தேசங்களிலும் நிலை பெற்றோங்கி வரும் கிளைகளையுடைய பிரஹ்மஞாந மஹாஸங்கத்தை மாதுஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையாருடன் ஸ்தாபித்த புண்ணியர் இவர். இவர் அமெரிக்காக் கண்டத்தில் ஆரஞ்சு மாகாணத்தில் (Orange) நியூ ஜெர்ஸீ (New Jersey) என்னும் பிரதேசத்தில் 1832௵ ஜநித்தார். இவர் இயற்கையில் மிகச் சிறந்த குணங்கள் வாய்ந்தவர். கல்வியபிவிருத்தியும் ஸத்ய சீலமும் பெற்றவர். இவர் கைக்கொண்ட எக்கார்யத்திலும் இடைவிடாத பேரூக்கங்கொண்டு, எவ்வித ஸங்கடங்களையும் லக்ஷ்யம் செய்யாமல் முடிவு வரை விடாது உழைக்கும் திரகுணம் பொருந்தியவர். ஆரம்பத்தில் வ்யவஸாயத் தொழில் சம்பந்தமான கல்வியில் ப்ரீதியுடையவராய் அதைப்பற்றிய ஆராய்ச்சியிலும், அதன் தொழில் முறையிலும் மிக உத்ஸாஹத்துடன் உழைத்துவந்தனர். அத்துறையில் அநேக நுண்ணிய விஷயங்களைக் கண்டுபிடித்தனர்.

2. பின்பு அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் (Civil War) உண்டாகி யுத்த ஆரவாரம் ஏற்படவே, இராணுவத்தில் புகுந்து யுத்தவீரனாகி அச்சண்டை முடியும் வரை யுத்தம் புரிந்தனர். இதில் மிகக் கீர்த்திபெற்றனர். பின்பு இராணுவ இலாகாவில் வரவு செலவுகள் சம்பந்தமாய் சில பெரும் மோசங்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தும் வேலையில் ஐக்ய மாகாணத்து இராஜாங்கத்தார் இவரை நியமநம் செய்தனர். இரணகளத்தில் பீரங்கி குண்டுகளைக்காட்டிலும் அதிகமான அபாயமுள்ள வேலை இது. இவர் உண்மையைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தாமலிருக்கும்படி எதிரிகள் பல தடைகளையும் ஆபத்துக்களையும் செய்தனர். அவைகளை லக்ஷ்யம் பண்ணாமல் மஹா தைர்யத்துடன் உழைப்பவராகி, மோசங்களை வெளிப்படுத்தி மோசங்கள் செய்தவர்கள் பலரையும் நியாய வாயிலாகத் தண்டனையடையும்படிசெய்வித்தனர். இவ்வரும் பெரும் காரியத்தை ஜயத்துடன் நிறைவேற்றின இவரது பேருபஹாரத்தை துரைத்தனத்தார் நன்கு மதித்து இவருக்கு கௌரவங்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் அளவில்லாமல் ஈந்தனர். யுத்தத்தில் புறங்காட்டாத வன்மை யுத்தகளத்தில் இவரிடம் பிரகாசித்

தது; இதனினும் பன்மடங்காய் இவர் மநத்துள் நிறைந்த ஸத்ய மும், சுத்தமும், எடுத்த காரியத்தை நிறைவேற்றும் ஊக்கமும் இவர் நடத்திய மேற்குறித்த அரசாங்க வேலையில் பிரகாசித்தன. நான்கு வருஷகாலம் பிறர் நிந்தை, போராட்டம் இவையாவையு மநுப வித்து மநந்தளராது தமக்கு மேலுள்ளார் இட்ட வேலையில் கண் ணேக்க முடையராய் நடத்திவந்தார். தாம் ஏற்றுக்கொண்ட காரி யத்தை நிறைவேற்றிய பின்னர், அதினின்று விலகி ராஜ்யத்தின் சட்டக் கல்வி பயின்று வக்கிலாயினர். இவ்வேலையிலும் மிகுந்த நிபுணரெனப் பேர் பெற்றுத் தகுந்த வரும்படி ஸம்பாதித்து வந்த னர். இத்துடன் மத்தியில் பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதல் என்ற தொழிலையும் நடத்திவந்தனர்.

3 இப்போதுதான் இவரை பிளவாட்ஸ்கீ அம்மையார் தமது கார்யத்திற்குப் பேருதவி புரிவோராய் ஸம்பாதித்துக் கொண்ட னர். தமது குருநாதன் ஆக்ஞைபால் அம்மையார் இவரை நாடி அமெரிக்காக் கண்டம் சென்று அங்கு எட்டீ (Eddy) என்னும் நாம தேயம் பூண்ட ஓர் குடும்பத்தாரின் மனையில் இவரை ஸந்தித்தனர். இறந்தவர்களுடன் சம்பாஷிக்கும் சித்திகள் பெற்றிருந்த சிலர் இக் குடும்பத்தி லிருந்தனர். அமெரிக்கா நாட்டில் பிரஸித்திபெற்ற இரண்டு பெரிய பத்திரிகைகளுக்கு மேற்கூறிய எட்டீ குடும்பத் தில் நிகழும் அத்புத ஸம்பவங்களைப் பற்றி விசாரணை செய்து சமா சாரம் அனுப்புவதாய் ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பார் ஏற்றுக் கொண்டு அந்த எட்டியாரின் வாஸஸ்தாநத்தை அடைந்தார். அச் சமயம் பிளவாட்ஸ்கீ அம்மையார் அவரை ஸந்தித்து தாம் வந்த காரியத்தையும், தாம் உத்தேசித்திருக்கும் கருத்தையும் வெளியிட்ட னர். அன்று முதல் இவ்விருவர்களுக்குள்ளும் உண்டான சிநேகம் வளர்பிறைச் சந்திரன்போல விருத்தியடைந்து நிலைபெற்று வந்தது. இச்சிநேகம் இந்த ஜந்மத்தில் மாத்திரம் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. எத்தனையோ ஜந்மங்களில் பொதுஜந கைங்கர்யம் செய்வதில் சேர்ந்து உழைத்ததின் பூர்வ ஸம்ஸ்காரத்தின் பயனாய் இந்த சிநேகம் நேர்ந்ததென்று சொல்லவேண்டும்.

4. பின்பு 1875ஹு நவம்பர்மீ 17உயில் நூயார்க்கு நகரத் தில் இவ்விருவரும்சேர்ந்து "பிரஹ்மக்ஞாநசபை"என்று இப்போது

உலகத்தில் பிரவித்திபெற்றிருக்கும் சபையின் அங்குரார்ப்பணம் செய்தனர். பின்பு மிக உத்ஸாகத்துடனே இச்சபையை நடத்தி வந்தாரென்பது யாவரும் அறிந்த விஷயம். மாதாஸ்ரீ அம்மையாரிட மிருந்து பல ஞானவிஷயங்களைக் கற்றுணர்ந்து அவைகளைப் பற்றிப் பிறருக்குத் தெரிவிக்கும் திறமையும் பெற்றார். "பிரஹ்மவித்யை வெளிப்படல்" (Isis Unveiled) என்ற உயர்ந்த ஞானக்களஞ்சியம் என்று சொல்லத்தக்க ஞான நூலை அம்மையார் எழுதிப் பிரவித்தம் செய்தனர். இதை வெளியிடுவதில் நம் ஆல்காட் என்பார் பேருதவி புரிந்தனர். இவ்வருமையான நூல் மேல்நாடு எங்கும் பரவி அறிஞர் மனத்தைக் கவர்ந்தது.

5. பின்பு 1878-ம் வருஷத்தில் இவ்விருவரும் இந்தியாதேசத்துக்கு வந்தனர். முதலில் பம்பாய் நகரில் இருந்தார்கள். அதின் கண் பிரஹ்மஞானக் கிளைச்சபை ஒன்றை ஸ்தாபித்தனர். இந்தியர்களின் பொதுப்படையான அபிவிருத்தியைக் கருதினவராய், ஸ்வதேசக் கைத்தொழில் முயற்சி அதிகமாக நலம்பெறவேண்டுமெனப் பலமுறை தம்மை ஸந்திப்பவர்களுக்கு இவர் அறிவுறுத்தி வந்தார். பிரஹ்மஞானசபையின் பெரிய கூட்டத்தில் இந்தியர்கள் தங்கள் தேசத்து விளைபொருள்களைத் தங்களுடைய கைத்தொழில் முயற்சியால், நாநாவிதமான நுகைகளாகச் செய்து வரவேண்டுமென இவர் வற்புறுத்திக் கூறினர். பின்பு வேறொரு சமயத்தில் பிரஹ்மஞான மஹாசபை திரும்பவும் கூடியதில், காங்கிரஸ் (Congress) என்று சொல்லப்பெறும் இந்தியா தேசமெங்கும் நலம்பெறவேண்டி உழைத்துவரும் மஹாஜந சபையின் அங்குரார்ப்பணம் ஏற்பட்டது. இந்த பிரஹ்மஞானசபை நம் தேசத்திற்கு வருமுன் நம் தேசம் ஆழ்ந்த ஸுஷுப்தியில் அமைந்திருந்தது. பெருந்தூக்கமிது. இத்தூக்கத்தினின்று இத்தேசத்தை எழுப்புதல் சாதாரண காரியமன்று. இது மனிதச்செயல் அன்று என்றே மதிக்கலாம். தேவாநுக்கிரஹமின்றி இஃது இயலாது. இத்தேசத்தின் யோக க்ஷேமத்தைக் கண்ணிமைபோல் காத்துவரும் மஹரிஷிகளால் தான் இத்தகைய விஷயம் முடியும்.

6. 1880ஆண்டில் லங்கைத்தீவுக்கு அம்மையாரும், ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பாரும் சென்று, கீழ்க்கடையில் இருந்த பௌத்தர்களைக் கைதூக்கிவிட்டார்கள். தாம் பௌத்தமதஸ்தர் எனச் சொல்வதற்குக்கூட வெட்கிய பௌத்தர்கள் பௌத்த மதஸ்தர் என தைர்யமாகச் சொல்லவும், அவ் வுயர்நலமமைந்த மதத்தை அநுஷ்டிக்கவும் தலை தூக்கினார்கள். மூன்று பௌத்த கல்லூரிகளும் (Colleges) 205 பாடசாலைகளும் ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பாரின் முயற்சியால் நிருவப்பெற்று இப்போதும் நடத்தப்பெறுகின்றன. அவைகளில் சுமார் 30000 பௌத்த பாலர்கள் கல்வி கற்பிக்கப்படுகின்றனர். மேலும் இவர் செய்த கார்யங்களின் மிகவும் மேன்மையானது ஒன்று உண்டு. பௌத்த மதஸ்தர்களில் மஹாயாநர்கள், ஹீநயாநர்கள், என இரு வகுப்பினர்கள் உளர். அவர்கள் முறையே உத்தரத்தார்கள் என்றும் தக்ஷிணத்தார்கள் என்றும் பெயர் பெறுவர். இவ்விருதிறத்தார்களுள் சமயக் கொள்கைகளில் சில வித்யாசங்களினால் அந்யோந்யமும் சிநேக நிகழ்ச்சியும் இல்லை. ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பார் பௌத்தமதஸ்தர். இவ்விருவகை சமய முறைகளையும் நன்கு உணர்ந்தும் ஆராய்ந்தும், இவ்விரு கட்சிக்காரர்களும் அங்கீகரிக்கும்படியாக 14 முக்ய அம்சங்களை எடுத்தெழுதிப் பிரவித்தம் செய்தனர். இவர் மூலமாய் இந்த இரு திறத்தாருள்ளும் முன்னிருந்த துவேஷ புத்தி நீங்கிப் போயிற்று. பொதுப்படையான 14 கொள்கைகளையும் இவ்விருவகையார்களும் நாளடைவில் அங்கீகாரம் செய்து அநுஷ்டாநத்தில் வைத்துக்கொண்டு வருகிறார்கள். இவர் பௌத்த மதத்தினராயினும் ஹிந்து மதத்தைப் பற்றி உயர்ந்த அபிப்பிராயமுடையவர். ஹிந்துக்கள் தங்களுடைய உயர்நலமமைந்த மதத்தை நன்றாய்ப் படித்து, படித்தபடி அநுஷ்டிக்கின்றார்கள் இல்லையே என மிகவும் வியஸநப்படுவர். இவருடைய அபிப்பிராயத்தில் எல்லா மதமும் ஈசுவரன் ஸம்மதமே என்பதாம். எல்லா மதங்களும், வெள்ளியம்பலம் என்ற மஹத்தான ஞாநசபையினின்று தோன்றின. அச் சபையினின்று வெளிவந்த மஹரிஷிகள் உலகில் அந்தந்த தேசகால வர்த்தமாநங்களுக்கு ஏற்ப ஞாநமுறைகள் அடங்கிய அந்தந்த மதங்களை ஸ்தாபித்துள்ளார்.

241



“வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கும்பரம் பொருளே! நின் விளையாட் டல்லான்
மாறுபடும் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா.”—தாயுமானவர்.

7. 1882-ம் வருஷத்தில் சென்னபட்டணத்திற்கு இவ்விருவர்களும், பிரஹ்மஸ்ரீ டி. சுப்பராவ் அவர்களின் வேண்டுகோளின்மேல், வந்தார்கள். தங்களுடைய சொந்தப் பணத்தைக்கொண்டு ஆதியாற்றில் பங்களாவும் தோட்டமும் வாங்கினார்கள். அதன்கண் பிரஹ்மக்ஞானசபையின் சாசுவதமான ஆலயத்தை ஏற்படுத்தினார்கள். இப்போது அந்த ஆலயம் மேன்மேலும் விஸ்தாரமாகி அநேக கார்யாதிகளுக்காக பல கட்டடங்கள் கட்டப்பெற்றிருக்கின்றன. இவர் இந்தியாதேசம் முழுமையும் பலமுறை தேசஸஞ்சாரம் செய்து, பல நகரங்களில் ப்ரஹ்மக்ஞாநக் கிளைச்சபைகளை ஸ்தாபித்திருக்கின்றனர். உலகமுழுமையும் இருமுறை யாத்திரை செய்து அநேக இடங்களில் கிளைச்சபைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். இவர்கள் மரணகாலத்தில், 893 கிளைச்சபைகள் ஸ்தாபிக்கப்பெற்றிருந்தன. உத்தரதுருவத்திற்கு சமீபத்திலும் ஒரு கிளைச்சபை இருக்கின்றது.

8. 1891-ம் ௵ மேமீ 8௳ மாதஸ்ரீ ஹேலிநாம்பாள் அம்மையார் மரணமாயினர். அவர்கள் இறந்தமேல் முன்னவைவிட இன்னும் அதிக ஊக்கத்துடன் சபையின் கார்யாதிகளை நன்குப் இவர் நடத்திவந்தனர். பின்பு மாதஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மை சபையைச்சேரவே அவர் சபையின் கார்யங்களை ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பாருடன் நடத்திவந்தனர். வெளியேறிப் பலவிடங்களுக்குச் சென்று உபந்யாசங்களைச் செய்தலைப் பெஸண்டு அம்மையார் நடத்திவந்தார்.

1907 ௵ பிப்பிரவரிமீ 17௳ பகல் 7மணி 17 நிமிஷத்திற்கு ஆதியாற்றில் தமமுடைய ஆச்சிரமத்தில், தம்முடைய பிரியமான ஸ்நேஹிதர்கள், பலமதஸ்தர்களும், பல நிறத்தவர்களும் சூழ, பெஸண்டு அம்மை முதலியவர்கள் முன்னிலையில் இப்புண்ணியர் இவ்வுலகத்தை விட்டு வெளியேகினர்.

இவர் மரணமான மேல், இவர் பிரேதம் புஷ்பங்களின் மத்தியில் வைக்கப்பட்டது. சபையைச் சேர்ந்த ஞாந சகோதரர்கள் பலரும் ஏராளமான நாநாவிதமான புஷ்பங்களை அதன் மேல் தூவினார்கள். பௌத்தமத, ஹிந்துமத, ஜோராஸ்தர்மத, கிறிஸ்து மத முதலிய கிரந்தங்களி லின்று அந்தந்த மதஸ்தர்களின் உயர்நல மமைந்தவர்கள் திவ்விய வசநங்களையும் தேவ ஸ்தோத்ரங்களையும் படித்தனர். பின்பு அதைச் சந்தநக்கட்டையால் தஹநம் செய்தனர். தஹநம் செய்த இடத்தில், ஞாபகச்சின்னமாக, ஒரு கட்டடம் அமைக்கப்பெற்றுள்ளது. தஹநம் செய்தமேல், அஸ்தியின் சிலபாகத்தைச் சமுத்திரத்திலும், சிலபாகத்தை கங்கைநதியிலும், சிலபாகத்தை ஒரு ஸுவர்ண பாத்திரத்திலும் வைக்கும்படி ஏற்பாடுசெய்தார்கள்.

மரணமாகுமுன், தம்முடைய குருநாதன் ஆக்ஞைப்படி மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையைத் தன் ஸ்தாநத்தில் இருக்கும்படி நியமநம் செய்தனர். இவர் பல ஜன்மங்கள் முன் எடுத்தவைகளில் ஒன்றில் இந்தியாதேசத்தில் கீர்த்திபெற்ற அசோகன் என்ற சக்ரவர்த்தியாக இருந்தனர் என திரிகாலஞானியான ஒருவர் சொல்லியிருக்கின்றனர். இவர் சீக்கிரத்தில் உலகத்திற்குத் திரும்புவாரென்றும், தாம் ஸ்தாபித்த பிரஹ்மக்ஞாந சபையை இன்னும் அதிகமாக நலம்பட நடைபெறும்படி செய்வாரென்றும் அறிஞர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ப. நா.

## ஸ்ரீ சடகோபர் வைபவம்.

(148-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

இங்ஙனம் பகவானது பரமகருணாவர்ஷம் ஆழ்வாராகிய பள்ளத்திற் றேங்கிய நிலையில், பெருமானும் அவரும், தாயும் குழந்தையும் போல ஒருவரை யொருவர் கண்ணாலும் செவியாலும் வாயாலும் பருகி, நேருக்குநேர் அநுபவித்தும், சிறிது பிரியினும் தரிக்கமாட்டாது புலம்பியும், கூடியநுபவிக்கும் நிலையில் தன் வசமற்று ஆனந்தக் கூத்தாடியும், புகழ்ந்துபாடியும் ஈடுபட்டு நிற்கும் அற்புதம் நம்மால் எழுதுந்தரமன்று.

> "வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று
> ஆர்வுற்ற என்னையொழிய, என்னின் முன்னம்
> பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்"
> "உன்னது என்னதாவியும், என்னது உன்னதாவியும்,
> இன்னவண்ணமே நின்றாய் என்றுரைக்க வல்லனே"
> "எப்பொழுதும் நாள்திங்கள் ஆண்டூழி யூழிதொறும்
> அப்பொழுதைக் கப்போழுதென் ஆராவமுதமே"

நலத்தான் மிக்க குடந்தைக் கிடந்தாய்! உன்னைக் காண்பான் நான் அலப்பாய் ஆகாசத்தை நோக்கி, அழுவன் தொழுவேனே"

> "மாயக்கூத்தா! வாமநா! வினையேன் கண்ணா! கண்கைகால்
> தூய செய்ய மலர்களா, சோதிச் செவ்வாய் முகிழதா,
> சாயற் சாமத்திருமேனி தண்பாசடையாத், தாமரைநீள்
> வாசத்தடம் போல் வருவானே! ஒரு நாள் காணவாராயே"
> "யானும் ஏத்தி, ஏழுலகும் மற்றும் ஏத்திப் பின்னையும்
> தானும் ஏத்திலும்—தன்னை ஏத்தவேத்த எங்கெய்தும்?
> தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகித் தித்திப்ப
> யானும் எம்பிரானையே ஏத்தினேன், யானுய்வானே"

என்பன முதலிய பாசுரங்கள் நோக்கத்தக்கன. இங்ஙனம், ஸர்வேச்வரன் தம்மை வலிந்தாட்கொள்ளத் தாம் பரமஞானிகளும் அடைதற்கரிய பதவியை வெகு சீக்கிரத்தே பெற்றதை வியந்து ஆழ்வார்—

“குறிக்கொள் ஞானங்களால் எனையூழி செய்தவமும்
கிறிக்கொண்டு இப்பிறப்பே சிலநாளினில் எய்தினன்யான்”
“மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்தடியை யடைந்துள்ளந்தேறி
ஈறிலின்பத் திருவெள்ளம் மூழ்கினன் யான்”
“உன்னைச் சிந்தைசெய்து, உன்னெடுமொழியிசை பாடியாடி,
முன்னைத் தீவினைமுழுவேர் அரிந்தனன் யான்” [யென்
“தூய அமுதைப் பருகிப் பருகியென்
மாயப் பிறவி மயர்வு அறுத்தேனே”

என்றிவ்வாறு அருளிச் செய்கின்றார். இனி, “அறிவினாற் குறைவில்லா அகல்ஞாலத் தவர் அறிய, நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி” யாகிய கண்ணபிரான் அருச்சுனன் வியாஜத்தையிட்டு ஞாலத்தவர் பொருட்டுக் கீதை பதினெட்டத்யாயத்தையும் அருளிச் செய்தது போல, அப்பிரானே ஞானபரிபூர்ணரான இவ்வாழ்வார் வாக்கின் நின்று அதனாலுண்டாகிய அவரநுபவங்களை உலகத்தார்க்குத் திருவாய்மொழி ரூபமாகப் பரிணமிக்கச் செய்து உபகரித்தான் என்பதே பொருத்தமாம். இங்ஙனம் இறைவனே தமக்குக் கடாக்ஷித்தருளிய தன்மையை ஆழ்வாரே

“ஆமுதல்வனிவன்’ என்று தற்றேற்றி, என்
நாமுதல் வந்துபுகுந்து, நல்லின் கவி
தூமுதற் பத்தர்க்குத் தான் தன்னைச்சொன்ன, என்
வாய் முதலப்பனை என்றும் மறப்பனோ”
“சீர்கண்டு கொண்டு, திருந்து நல்லின்கவி,
நேர்பட யான்சொல்லும் நேர்மை யிலாமையின்,
ஏர்விலா என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை
பார்பரவு இன்கவி பாடும் பரமரே”.
“இன்கவி பாடும் பரமகவிகளால்
தன்கவி தான் தன்னைப் பாடுவியாது, இன்று
நன்குவந்து என்னுடனாக்கி, என்னால் தன்னை
வன்கவி பாடும்; என் வைகுந்த நாதனே”

என்ற பாசுரங்களில் அற்புதமாகக் கூறுதல் காண்க. இவ்வாறு, ஈசுவரனுந்தானும், கைகோத்து நின்று ஆடிப்பாடி அகங்கரையும்படியான இப்பெரியாருடைய பரமபக்திக்கு ஒப்புக்கூறவேண்டுமாயின், ஸ்ரீமத் பாகவதங்கூறுமாறு, கோபிகைகளுடைய பிரேமாதிசயத்தை நாம் சொல்லலாகுமேயன்றி வேறுகிடையாதென்க. ப்ருந்தாவநத்தில் நிகழ்ந்த கோபிகைகளின் ஆச்சரியகரமான பிரேமபாராவாரத்தின் ஆழத்தை நம் ஆழ்வாரும் அளந்து கண்டு கொண்டவர். எங்ஙனம் எனில்:—கண்ணபிரானிடம் கோபிகா ஸ்திரீகள் காட்டிய அப்பிரேமாவிலாசத்தை, இவ்வாழ்வார் தாமும் நடித்து அநுபவித்த விஷயம், திருவாய்மொழியிற் பல திருப்பதிகங்களாலும் நாம் நன்கு அறிந்தது. ஸர்வேச்வரனது கல்யாண குணங்களானவை, கேவலம் பெண்களைமட்டுமோ ஆட்டிவைக்கக் கூடியது? பிரேமை அல்லது பக்தி தலையெடுக்கப்பெற்ற ஏனை ஆண்பாலரையும் அங்ஙனமே ஆட்டிவைக்கவல்ல அற்புதம் வாய்ந்ததாம். இத்தகைய மஹாபக்திமாங்கள்முன், தத்துவக்ஞாநிகளாயுள்ளார் நிலை, தாழ்ந்ததென்றே புலப்படும். பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ண தேவரை, ஒருவர் ஞாநபக்திகளின் வித்யாசத்தைப்பற்றி உசாவியபோது, அப்பெரியார் கூறியதாவது:—"ஞாநமும் பக்தியும் முடிவில் ஏகந்தான்; ஆனல், ஞாநத்தைப் புருஷனுக்கும், பக்தியைப் பெண்ணுக்கும் ஒப்பிடலாம்; புருஷனாகிய ஞாநமானது எம்பெருமானது மாளிகையில், வெளியறைகள் வரையில்தான் செல்லலாம்; ஆனல் அவனுடைய அந்தப்புரத்தில், ஸ்திரீ ரூபமாகிய பக்திதவிர, வேறெவரும் பிரவேசிக்க முடியாது. இந்த பக்தியொன்றுக்குத்தான், ஸர்வேச்வரனது அந்தரங்க ரகஸ்யங்களையெல்லாம் அறியும் ஸ்வதந்த்ரம் உண்டு" என்றார். மஹாபக்திமானான சிறிய திருவடிக்கன்றோ, இப்பெரியவர் வசநப்படி, எம்பெருமானது அந்தரங்கஸ்தாநமான பிராட்டியது தரிசநம் லபித்தது! இவ்வாறு, ஸர்வேசனது ரகஸ்யஸ்தாநங்களில் எல்லாம் பிரவேசிக்கவல்ல பக்தி அல்லது ப்ரேமை தலையெடுக்கப் பெற்ற ஆழ்வார், ப்ருந்தாவநத்தில் நிகழ்ந்த கோபிகைகளுடைய விர்த்தியைக்கொண்டு, நடித்து மகிழ்ந்தது ஆச்சரியமன்று.

இங்ஙனம் ஆழ்வார், தம் பரமபக்தியால் எம்பெருமானது குணக்கடலில் ஆழ்ந்து ஈடுபட்டு "அவாவற்று விடுபெற்ற குருகூர்ச்சடகோபன்" என்று தாமே அருளியபடி, இம்மையிலே நிரதிசய ஆநந்தயுக்தராய் எழுந்தருளிய காலத்தே நாட்டில் மஹாகவிகளாய் உதித்தவர் பலர், தம் அரிய பெரியவாக்கை அற்பரான செல்வரிடத்துச் செலுத்தித் தாம்பெற்ற பேரின்பம் பெறாது கழிவதற்கிரங்கிச் "சொன்னால் விரோதமிது, ஆகிலுஞ் சொல்லுவன் கேண்மினோ" என்று தொடங்கும் பத்துப்பாசுரத்தால் அவர்க்குத் தாம்பெற்ற பேற்றையும் அவர் செயலின் இழிவையும் கூறி உபதேசிப்பர். இங்ஙனம் புலவரை நோக்கி, ஆழ்வார் கூறும் லௌகிக உபதேசங்களில்—

"கழிய மிக நல்ல வான்கவிகொண்டு புலவீர்காள்!
இழியக் கருதி மானிடம் பாடல் என்னாவதே"
"என்னாவது? எத்தனை நாளைக்குப் போதும்? புலவீர்காள்
மன்னா மனிசரைப்பாடிப் படைக்கும் பெரும்பொருள்"
"வம்மின் புலவீர்! நும் மெய்வருத்திக் கைசெய்து உய்ம்மினோ
இம்மன்னுலகிற் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்"
"கொள்ளக் குறைவிலன், வேண்டிற்றெல்லாந் தரும், கோதிலென்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்கவிசொல்லவம்மினோ"
"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ளல் ஆழிப்பிரான் எனக்கே உளன்."

என்பன முதலியவை அறிந்து மகிழத்தக்கவை. இவற்றில், ஆழ்வார், "தாம் பார்த்த அளவில், செல்வமுடையாரைத் தம் காலத்தில் காணாமையால், அன்னாரைப்பாடி வருந்துவதினும், தேகத்தை வருத்தி ஏதாவது ஒரு கைத்தொழிலைச் செய்து பிழையுங்கள்" என்றும் நீங்கள் மானிடம் பாடும் கவியாயிருக்க யான் "உலகம் படைத்தான் கவியாயினேன்" என்றும் கூறியிருத்தல்காண்க. இவ்வாறே செல்வநிலையாமையை "ஒருநாயகமாய்" என்ற பதிகத்தும் உலகியலின் கொடுமைகளை "கண்ணாதார் முறுவலிப்ப" என்ற பதிகத்தும் கூறுதல் காணலாம். இன்னும் எண்ணிறந்த லௌகிக உபதேசங்களை ஆழ்வார் வாக்கிலிருந்து அறிந்துகொள்க.

இனி, ஆழ்வார் "பொலிக பொலிக பொலிக" என்ற பதிகத்தில் தற்காலத்தில் திருமாலடியார்கள் உலகெங்கும் பரவி "ஆடிப்பாடி அகங்கரைந்து" நின்ற அற்புதத்தை அருளிச்செய்வதோடு, இத்தகைய அடியாராக உலகத்தாரெல்லாம் ஆகும் பக்ஷத்தில், "போயிற்று வல்லுயிர்ச்சாபம்; நலியும் நரகமும் நைந்து நமனுக்கு இங்கியாதொன்றும் இல்லை; கலியும் கெடும்" என்று கூறுவர். எல்லாருஞ்சேர்ந்து எம்பெருமானைத் தொழுமிடத்தது, அது கிருதயுகச் செய்தியாதலால், கலியுகத்தன்மை அழியுமென்பதை "ஒக்கத் தொழுகிற்றிராகில் ஒன்றுங்கலியுகமில்லை" என்பதனுல் அருளிச் செய்தல் அறியத்தக்கது.

இதுவரை, ஸ்ரீ சடகோபரது வைபவங்களையும் உபதேசங்களையும், வைஷ்ணவ சம்ப்ரதாய நூல்களை ஆதாரமாகவின்றி, திருவாய்மொழியால் யாவருக்குந் தோன்றக்கூடிய வளவில் சுருக்கிக் கூறினேன். ஸம்ப்ரதாய நூல்முறையில் நின்று, ஆழ்வார் அருளிச் செயல்களை ஆராயக்கூடுமாயின், அஃது உலகத்துக்கே ஆச்சரியத்தை விளைவிக்கவல்லதென்பது திண்ணம். ஏனெனில், வடநூற்கடலை நிலைகண்டதனுல் ஆகிய சாஸ்திரஜந்ய ஞானமும், இயற்கைப் பேரறிவும் படைத்த மஹான்கள் எத்தனையோபேர் பல நூற்றுண்டுகளாக இத்திராவிடவேத ஸம்பந்தமாக ஆராய்ச்சி செய்து எண்ணிறந்த கிரந்தங்கள் இயற்றிவைத்திருக்கின்றனர். அவற்றை முழுதும் படித்தற்கு ஒரு புருஷ ஆயுள் போதாது. அவை, காலக்ஷேபக்கிரந்தங்களென்று ஸ்ரீ வைஷ்ணவகோஷ்டியில் ஆயுள் முழுதும் பக்திச்ரத்தைகளுடன் பாராயணஞ் செய்யப்பட்டுவருகின்றன. அம்மஹா கிரந்தங்களின் முறையில் நின்று, பெரியோர் கூறற்குரிய ஆழ்வார் வைபவங்களை, அவற்றில் ஞானம் சிறிதுமில்லாத யான் கூறுதல் நல்லறிவுடையார்முன் நகையாடற்கு உரியதென்பது திண்ணம். இனி இவ்வாழ்வார் வைபவத்தைப்பற்றிக் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாடர் பாடிய சடகோபரந்தாதியிலுள்ள சில பாடல்களைக்கூறி இவ்வுபந்யாசத்தை முடிக்கின்றேன்.

"ஆயிரமாமறைக்கும் அலங்காரம் அருந்தமிழ்க்குப்
பாயிரம், நான்மறைக்குப் படிச்சந்தம், மனுவற்கெல்லாம்

தாய், இருநாற்றிசைக்கும் தனித்தீபம், தண்ணங்குருகூர்ச்
சேய், இருமாமரபும் செவ்வியான் செய்த செய்யுட்களே".

"அந்தணர்க்கோ, நல்லறத்தவர்க்கோ, அன்றிபோகியராய்
வந்தவர்க்கோ, மறவாதியர்க்கோ, மகாக்குழைசேர்
சுந்தரத்தோளனுக்கோ, அவன் தொண்டர்கட்கோ, சுடர்தோய்
சந்தனச்சோலைக் குருகைப்பிரான் வந்து சந்தித்ததே"

"சேராதனவுளவோ பெருஞ்செல்வர்க்கு வேதஞ் செப்பும்
பேராயிரம், திண்பெரும்புயம் ஆயிரம், பெய்துவைத்
தாரார்முடி ஆயிரம், குருகூர்ச்சடகோபன் சொன்ன
ஆரா அமுதக்கவியாயிரம் அவ்வரியினுக்கே."

"மனையும் பெருஞ்செல்வமும் மக்களும் மற்றவாழ்வுந்தன்னை
நினையும் பதமென நின்றபிரான், குருகூர்நிமலன்,
புனையுந் தமிழ்க்கவியால் இருள்நீங்கிப் பொருள் விளங்கி
வினையுந் திரிவுற்றன; குற்றம் நீங்கின; வேதங்களே."

முற்றிற்று.

மு. ராகவன்.

---

## நன்மொழி.

122. ஒவ்வொருவனும் தன்னை நடமாடும் கோயிலாக மதிக்க வேண்டும். ஒவ்வொருவன் ஹிருதயத்திலு மிறைவன் உறைவிடம் கொண்டிருக்கிறதாக நினைக்கவேண்டும். அதனால் தீய எண்ணங்களைத் தவிர்ப்பான். ஈசன் கோயிலாகத் தன்னை நினைக்கும்பக்ஷத்தில் அதை சுத்தமாய் வைத்துக்கொள்ளுவானன்றோ? அதனின்று எல்லாக் காமனைகளும் விலக்கப்பெறவேண்டுமன்றோ? தன் ஹிருதயத்தினின்று காமக்குரோதாதிகளை அகற்றவேண்டும்.

உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே—திருமந்திரம்.

## சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம்.

(2-ம் தொகுதி 420-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

வணிகர்வேந்து சுமதியை விட்டுப் பிரிந்தபின்னர் சுமதி பின்வருமாறு சிந்திக்கலானாள். பெரியோர் ஸ்திரீகளை அபலையென்றும் துர்பலை யென்றும் சொல்வது உண்மையே. ஸ்திரீகள் துணையோடல்லது நெடுவழி போகக் கூடாதென்றும் சொல்லுகிறார்கள். தனித்திருக்கிற சமயம் பார்த்து இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றதும், துரோபதையைக் கீசகன் இச்சித்ததும் பிரசித்தமாயிற்றே. ஆகையால் தனித்திருந்த எனக்கும் இவ்வாபத்து நேர்ந்தது. இனி இந்த இடத்தில் ஒரு நிமிஷமேனும் இருத்தல் கூடாது. காமப்பேய் பிடித்தவன் செய்கை எச்சமயம் எவ்வாறிருக்குமோ. நான் என் அருமைச் சகோதரனை விட்டுப்பிரிந்ததுமுதல் எனக்குத் துன்பம் தொடங்கிற்று. அதுவரை நாங்கள் பதியிழந்து நிதியிழந்து உற்றார் பெற்றாரையுமிழந்து கானகத்தில் வசிக்க நேர்ந்தும் எல்லாத் துக்கங்களையும் மறந்து சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்து வந்தோம். என் சகோதரன் எனக்குப் பலமான காப்பாக இருந்தான். அவன் போன இடமோ தெரியவில்லை. நானோ அநாதையாய் இந்தத் துஷ்ட வணிகர் வேந்தன் கையில் அகப்பட நேர்ந்தது. அவனோ மதிமயங்கிப் பேசாத பேச்சுக்களைப் பேசுகிறான். காமவெறி கொண்டவர்களுக்கும், பித்தவெறி கொண்டவர்களுக்கும் சிறிதும் வித்தியாசமில்லை. அவன் மறுபடியும் இவ்விடம் வந்து மானபங்கமான காரியத்தைச் செய்தாலும் செய்வான். ஆகையால் உடனே இவ்விடத்தைவிட்டு எங்கேயாவது ஓடிப்போவதே உத்தமம். இந்த நடுநிசியில் நான் எங்கே போவேன். பேயும் உறங்குமபடியான காலம். ஆந்தையும் தன் கிளைக்கூட்டை யொழிந்து அயர்ந்து நித்திரை செய்கின்றது. நான் என்செய்வேன். பகவானே! இந்தச் சமயத்தில் இந்த அநாதையை ரக்ஷிக்கவேண்டியவர் நீரே. நெஞ்சு படபடவென்று துடிக்கின்றது. ஏதாவது ஒரு வழியைப் பற்றிக்கொண்டு, வருவது வரட்டும் என்று போகலாமென்றாலோ இந்த உக்கிரமான வனத்தின் மூலை முடுக்கு யாதொன்றுந்தெரியவில்லை. இலங்கையில் சீதையைத் தேடச் சென்ற அநுமானுக்குப் பூர்ணசந்திரோதயம் உதவினதுபோல் எனக்கும் சந்திரன் சகா

யமாக இருக்கிறான். தட்டுக்கிட்டு இந்த இடத்தினின்றும் நீங்கி வேறு எங்கேயாவது சிறிதுதூரம் சென்று ஒளித்திருந்து பின் அருணோதயமானவுடன் ஏதாவது ஒரு வழியிற் செல்வேன் என்று தீர்மானித்துக்கொண்டு அவ்வறையை விட்டு வெளியே வரவே, அங்கிருந்த வேலைக்காரியும் படுத்துறங்குவதைக் கண்டாள் சுமதி. “இது நல்ல வேளைதான். நமக்குத் தடையாயிருக்கிற இவ் வேலைக்காரி உறங்குவதே எனக்கு நல்ல சகுனம். இதுதான் சமயம் நான் தப்பித்துக்கொள்வதற்கு. இனி அரைவினாடியும் இவ்விடம் தங்குதல் கூடாது.” என்று சொல்லிக்கொண்டே அங்கு செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாகச் சிறிது தூரம் சென்றாள். பட்டப்பட்டென்று எரிகிற நிலாவின் உதவியால் பாதைக்குச் சிறிது தூரத்தில் ஒரு விசாலமான விருக்ஷமிருப்பதைக் கண்ணுற்றாள். அது தளிர்த்துப் பூத்துக் காய்த்து மிகவும் ரம்மியமாயிருந்தது. அடர்ந்திருந்தபடியால் எவர் கண்ணுக்கும் அங்கிருக்கும் பொருள்கள் புலப்படவில்லை. அம்மரமே தான் ஒளிந்துகொள்வதற்கு நல்ல அடைக்கலஸ்தானம் என்று அதனை நோக்கிச் சென்றாள் சுமதி. அஃது ஓர் அழகிய மாமரம். அதன் அடி பருத்துச் சொற்ப உயரத்திலேயே கிளைத்திருந்தது. இரவில் சாவதானமாய்த் தங்குவதற்கு இதுதான் நல்ல இடமென்று அதன்மீது சுலபமாய் ஏறி அதன் அகன்ற கிளைகளில் ஒன்றில் உட்கார்ந்து மற்றொரு கிளையில் சாய்ந்துகொண்டு அடுத்திருந்த சிறு கிளைகளில் கைகளைப் போட்டுக்கொண்டு சௌகரியமாய் வீற்றிருந்தாள். மனோ விசாரத்தால் தூக்கம் வரவில்லை. ஒருகால் அப்பாதகன் தேடிவந்தாலும் வந்துவிடுவான் என்று வழி மீதே கண்வைத்த வண்ணமாய் விழித்துக்கொண்டிருந்தாள். எப்பொழுது நிலந்தெளியப் போகின்றது என்று காத்துக்கொண்டிருந்தாள். வரவர ஜீவராசிகளின் தொனிகள் கேட்கத் தொடங்கின. பாரத்துவாஜ பக்ஷிகள் சப்திக்கத்தொடங்கின. வாசனையான காற்று வீசத் தொடங்கிற்று. உடனே விடியற்காலம் ஆகிறசமயம்என்று அறிந்து மரத்தைவிட்டுக் கீழே இறங்கிக் குறுக்குப் பாதையாகச் சிறிது தூரம் செல்லவே அங்கே ஒருசிறுபாதை தெரிந்தது. அதன் வழியாய்ச் சென்று அதற்கு அடுத்துச் செல்லும் ரஸ்தாவைப் போயடைந்தாள், அங்கு சில கட்டை வண்டிகள் போய்க்கொ

ண்டிருந்தன. அவை யொன்றையொன்று தொடர்ந்து எறும்பு ஊர்வதுபோல் சென்றன. அவைகளின் மேற்கூடுகளிற் முன்பக்கமும் பின்பக்கமும் வைக்கோல் திரணைகள் முறுக்கிக் கட்டப்பட்டிருந்தன. அனேக வண்டிகளின் முன்னும் பின்னும் கயிற்று வலைகள் பின்னப்பட்டுச் சாமான்களை விழாமற் காத்துக்கொண்டிருந்தன. சில வண்டிகளின் பின்புறத்தில் சிற்றேணிகள் குறுக்காகக் கட்டப்பட்டிருந்தன. அவ்வண்டிகளின் அடிப்புறத்தில் சிறு கூடைகள் கட்டப்பட்டு அங்குமிங்கும் ஊசலாடிக்கொண்டிருந்தன. அவைகள் சிலவற்றில் மானுடக்குரலும் கேட்டது. அவ்வண்டியிலுள்ள வயோதிகர்களிற் சிலர் பூபாள ராகத்தில் பகவத் ஸ்தோத்திரம் பாடிக்கொண்டிருந்ததாகத் தோற்றிற்று. வேகமான நடையுடனே அவ்வண்டிகளை அடுத்துச் சென்றாள் சுமதி. வண்டிக்காரர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். மாடுகளும் தூங்குவனபோல் மந்தகதியாய் நடந்து கொண்டிருந்தன, முன்வண்டிக்காரன் மட்டும் இனிய சிற்றின்பப்பாட்டுகளைப் பாடிக்கொண்டிருந்தான். இடைக்கிடையே மாடுகளை அதட்டி வாலை முறுக்கி ஓட்டிக்கொண்டு போனான். அப்பொழுது மாடுகளின் கொம்புகளிற் கட்டப்பட்ட சதங்கைகள் கலீர்கலீர் என்று ஒலித்தன. சொற்பநேரம் சுறுசுறுப்பாக நடந்த மாடுகள் மறுபடியும் வண்டிக்காரனுடைய இனிய இராகத்தைக் கேட்டு ஆனந்தப்பட்டு மெதுவாய் நடக்கத் தொடங்கின. சுமதிக்கு நக்ஷத்திரங்களைப் பார்த்து நாழிகை சொல்லத் தெரியுமான படியால் அவைகளை அண்ணாந்துபார்த்து இன்னும் சூரிய உதயத்துக்கு மூன்று நான்கு நாழிகைப் பொழுது இருப்பதாக அறிந்தனள். கிழக்குத்திக்கிலும் சொற்பம் வெளுமை காணப்பட்டது. சுமதியும் அவ்வண்டிகளின் மறைவிலேயே போய்க்கொண்டிருந்தாள். வரவர நிலந்தெளிந்தது, வெண்மையாய்த் தோன்றிய குணதிசை சற்றுச் சிவந்து காணப்பட்டது.

அச்சமயத்தில் நடுவண்டியிலிருந்து இருகிழவர்கள் பூபாள இராகம் பாடியவண்ணமாக இறங்கினார்கள். சிறிததூரம் நாமஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு செல்லுங்கால் பின்பக்கம் நோக்கினர், ஓருருவம் காணப்பட்டது. சற்று நிதானித்துப்பார்க்கவே மானுட வடிவமென்று கண்டனர். தங்களைச்சேர்ந்தவர்களில் ஒருவர் என்று

நினைத்து ஒருவர் பெயரைச் சொல்லிக் கூவவே சுமதி பதில் யாதொன்றும கூறவில்லை. பின் அவர்கள் வேற்றுமனுஷன் என்று நினைத்துச் சற்றுத் தாமதித்து நோக்கவே வருவது ஒரு பெண்பிள்ளை யென்று கண்டு, அம்மா! நீ யார்? எங்கிருந்துவருகின்றாய்? நீ எந்தவண்டிக் குரியவள்? உன்னுடன் வேறு இன்னும் யார் வருகிறார்கள்? நீ திடீரென்று விடியுமுன்னர் துணையின்றிக் கீழிறங்கக்காரணமென்ன?" என்று கேட்கவே சுமதியும் அவர்கள் பேச்சாலும் நடையுடை பாவனையாலும் தன்னுடைய ஸ்வதேசத்தைச் சேர்ந்தவர்களென்று நினைத்து மறுமொழி கூறலானாள்.

"ஐயா! நான்இருப்பது இராஜபுதன ஸம்ஸ்தானம். என் தமயன் என்னைப்பிரிந்து சில நாட்கள் ஆகின்றன, வழிதப்பி ஒரு காட்டில் சென்றுவிட்டான் என் தமயன். அவனைக்காணாது பரிதபிக்கும் நிலையில் என்னை இதோ தெரிகிற ஊருக்குத் தலைவனான வணிகன் பலாத்காரமாகத் தன் ஊருக்குக் கொணர்ந்தான். அவன் வணிகர்களுக்கெல்லாம் தலைவன், மிகவும் செல்வவான், செல்வச் செருக்கால் என்னைச் சரிவரநடத்தாமல் துராகிருதம் செய்ய ஆரம்பித்தான், அதற்காக எத்தனையோ ஸாமதான உபாயங்கள் பண்ணிப்பார்த்தான். நான் சிறிதும் இணங்காததை அறிந்து நேற்றிரவு நானிருந்த உத்தியானவனத்திற்கு வந்து காதல் கேட்கக் கூடாத துர்மொழிகளைச் சொல்லிப் பின் பயமுறுத்திப் போயிருக்கிறான். விடியுமுன் தன்னை யான் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதியாதபக்ஷத்தில் என் உயிரை மாய்ப்பதாகச் சொல்லிப் போனான். அங்கிருந்தால் அப்பாதகன் பலவந்தமாய்க் கல்யாணம் பண்ண ஏற்பாடு செய்துவிடுவான், அதற்குப் பயந்து எங்கேயாவது தப்பி ஓடலாமென்று எண்ணி இரவிலேயே அவ்விடம்விட்டுப் புறப்பட்டு அத்தோட்டத்தின் ஒரு பெரியவிருக்ஷத்தின் மீது தங்கியிருந்து சற்று நேரத்துக்குமுன் புறப்பட்டு வந்துவிட்டேன். "பிராணனை விட்டாகிலும் மானத்தைக் காப்பாற்றவேண்டியது எங்கள் போன்ற பெண்களின் கடமை ஆகையால் துணையோடல்லது நெடுவழிபோகேல், என்றிருப்பினும் அத்தர்மத்தினும் மேலான தருமத்தைக்காப்பாற்ற தன்னந்தனியே தெய்வமே துணையாகப் புறப்பட்டேன், இதுதான் என்வரலாறு என்று சொன்னாள்.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

## ராமாயண கதாபுருஷர்களின் குண நிசயங்கள்.

### முக்கியமாய் பரதனைப்பற்றியவை.

(111-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

“லக்ஷ்மண! (தன் புருஷனுக்கு சக்களத்தியின் மகனென்று குறித்துச் சொல்லுவதற்காக ஸுமித்திரையின் மகனே என்றழைத்து) உன தமயனுக்கு வேண்டியவன் போலிருந்தாலும் அவனுக்கு நீ சத்துருபோலத் தானிருக்கிறாய். உன் தமயன் இந்த அவஸ்தையை யடைந்திருக்க அவனைப் போய்ப் பார்க்கமாட்டேனென்கிறாய். என்னை நீ மனஸ்வில் நினைத்துக் கொண்டு இருப்பதால் ராமன் சாகவேண்டுமென்ற இச்சை உனக்கிருக்கிறது. என விஷயமாக உனக்கு ஆசையிருப்பதால் ராமனைத் தயர்ந்து நீ போகவில்லை. அவனுக்கு வியஸனம் வருவது உனக்குப் பிரியமென்று நினைக்கிறேன். அவனிடத்தில் உனக்கு ஸ்நேஹமென்பதே யில்லை.”

இது கேட்டவுடன் இராமனுக்கு ஒரு விபத்தும் நேர்ந்திராதென்றும் மாரீசனே மோசமாக இராமன் குரல்போலக் கூவியிருக்கிறானென்றும் வணக்கமாகவும் ராகவனுடைய பராக்கிரமத்தை விவரித்தும் லக்ஷ்மணன் சொன்னவுடன் அதற்கு மேலும் சீதை சொன்ன சொற்களை வால்மீகி பகவானே சகிக்க முடியவில்லையென்று அவருடைய வசநத்தால் வெளியாகிறது. அதாவது,

“உண்மையைச் சொன்ன லக்ஷ்மணனைப் பார்த்து அடியிற்கண்டபடி கொடுமையான வார்த்தையைச் சொன்னாள்:—

மேன்மையில்லாதவனே, இரக்கமில்லாத செய்கையையுடையவனே, தயையில்லாதவனே, குலத்தைக் கெடுக்கவந்தவனே, ஐயோ! ராமனுக்கு இந்தப் பெரிதான வ்யஸநம் வந்திருப்பது உனக்குப் பிரியமென்று நினைக்கிறேன். தாயாதிக்காரர்களாகவும் உன்னைப்போன்ற தயையற்றவர்களும் வஞ்சனையாகத் தங்கள் ஸ்வபாவத்தை மறைத்து நடப்பவர்களுமான ஞாதிகளிடத்தில் இந்தப் பாபம் நேருவது ஆச்சரியமில்லை. நீ மஹா துஷ்டன். என்னை அடையவேண்டிய நிமித்தமாக வேஷம் போட்டுக்கொண்டோ, பரதனால் ஏவப்பட்டோ, தனியாகவந்த ராமனைத் துயர்ந்து நீ தனியாகவந்திருக்கிறாய். உன் எண்ணமாவது பரதனுடைய எண்ணமாவது நிறைவேறமாட்டாது, ஸுமித்ரை மகனே! உன்முன்பாக ஸம்சயம் இல்லாமலே நிச்சயமாக என் பிராணனை விட்டுவிடுவேன்.”

இதைக்கேட்டு பரமசாதுவாகிய லக்ஷ்மணன் கோபத்தை ஜயித்தவனாகக், கைகூப்பி வணங்கி, அடியிற் கண்டபடி சொன்னான்:—

“அம்மா! உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது. தாங்களே என்னுடைய தெய்வம், (நீ மிதிலை ராஜாவின் பெண்ணாயிருந்தும் ஸ்திரி ஜந்ம ஸ்வபாவம் உன்னிடத்திலும் அமைந்துள்ளது என்று குறிப்பிடுவதற்காக ‘மைதிலி’ என்று கூப்பிட்டு) தகாதவார்த்தை சொல்லுவது ஸ்திரீகளுக்கு வழக்கம் தான், அது ஆச்சரியமில்லை. விதேஹராஜாவாகிய ஜநகன் பெண்ணாயிருந்து என்னுடைய இரு செவிகளிலும் கொளுத்திய ஊசிகளை நுழையவிட்டதுபோல நீ இந்தவார்த்தை சொல்லுவதை நான் ஸகிக்கவில்லை. இந்த வநத்திலுள்ள பிராணிகளெல்லாம் எனக்கு ஸாக்ஷிகளாக இருந்துகொண்டு நான் சொல்லுவதைக் கேட்கட்டும். நான் நியாயத்தையே சொன்னேன். நீ கொடுமையாகப் பேசினாய். என்னையே நீ ஸந்தேகப்பட்டபடியால் நீ எப்படிவேண்டுமென்றாலும் கெட்டுப்போ. ஸ்வபாவமாகவே பெண்தன்மை கொடிது. என் தமயன் எனக்கு குருவாகையால் அவனுடைய கட்டளைப்படி நடக்கிற என்னை சந்தேகப்பட்டாயே, அவன் எங்கே இருக்கிறானோ அங்கே நான் போகிறேன், நீ க்ஷேமமாயிருப்பாயாக வந தேவதைகள் அனைவர்களும் உன்னைக் காப்பாற்றுவார்களாக.”

இப்படிச் சொல்லிவிட்டு லக்ஷ்மணன் புறப்பட்டபின்னும் சீதையானவள் இதைக் கேட்டுக் கண்களிலிருந்து ஜலம் பெருகத் தீவ்ரமான வார்த்தையினால் பதில் சொன்னாள்.

“லக்ஷ்மணா! ராமன் ஒழிந்தால் நான் கோதாவரியில் விழுந்துவிடுவேன் கழுத்திற் சுருக்கிட்டுக் கொண்டு இறந்து என் தேஹத்தை விட்டுவிடுவேன். க்ரூரமான விஷத்தை உண்ணுவேன். அக்நியில் பிரவேசித்து விடுவேன். இதல்லாமல் ராகவனைத் தவிர வேறொருபுருஷனை என் பாதத்தால் கூடத் தொடமாட்டேன்.”

துக்கத்துடன் அழுதுகொண்டு கைகளினால் மார்பில் அடித்துக்கொண்டாள். இது ரஜோகுணத்தின் விஸ்தாரத்தைக் காட்டுகிறது. ஆனால் பரதேவதை யென்று வியந்து கொண்டாடப்படும் சீதாதேவி இப்படி நடக்கலாமா வென்று ஒரு கேள்வி வரலாம். அதற்கு உத்தரம் சொல்லுவது இந்த உபந்யாசத்துக்கு சம்பந்தப்பட்டதன்று. சீதையினிடத்திலும் ரஜோகுணம் மேலாகி நின்றது என்று காட்டுவது மட்டும்தான் பிரகிருதம்.

7. சுந்தரகாண்டத்தில் சீதை ஹநுமானுடன் பேசும்பொழுது “மேற்சொல்லிய மூன்று குற்றங்களையோ அல்லது மூன்றிலொன்றையோ நினைத்து என்னை அவர்கள் வந்து சிறைமீட்காமலிருப்பதற்கு என்னுடைய மஹத்தான குற்றமே காரணமென்று” சொல்லுகிறாள்

சுக்கிரீவனுடைய சுபாவத்திலும் குற்றம் பொருந்தியிருக்கிறது. வாலீ இறக்காதிருக்க இறந்ததாக நினைத்து குகையை அடைத்து வந்துவிட்டான். அவ்வளவு பிரதாபமுள்ள சகோதரனைக் கொன்ற தாகநினைத்த சத்துருவை உடனே கொன்று பழிவாங்க நினையாமல் இராஜ்யத்துக்கு வந்து முடி சூண்டு வாலியினுடைய மனைவியாகிய தாரையையும் தன் மனைவியாகக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்தது தமோகுணம்ரஜோகுணங்களின் குற்றமாகும். இராமனுடையஸகவாஸம்கிடைத்தபின்னர் சுக்கிரீவனுக்குசாத்துவிக குணம்மேலாகி ஸ்ரீராமன் வாலியைக் கொன்றவுடன் அவன் இறந்து கிடப்பதையும்தாரையும் அங்கதனும் வருந்துவதையும் கண்டு சுக்கிரீவன் மநம் ஸகியாமல் இராமன் முன்னர்வந்து "ஐயா நான் செய்தது கொடும்பிழை. என் அண்ணன் இறந்தபின் இராஜ்யத்தா லென்ன பிரயோஜநம். நான் உயிர்தரிப்பதும் குற்றம். எனக்கு இராஜ்யம் வேண்டாம் உயிரையும் துறப்பேன்" என்று வருந்தினன். இந்த உயர்ந்த பண்பு அவனுக்கு முன்னர் இல்லை. இதல்லாமலும் முதலில் இராவணனையும் அவனுடைய ஊரையும் தான் அறியானென்று இராமனிடத்தில் சுக்ரீவன் பொய்யாகச் சொல்லிவிட்டு அவனுடைய காரியமெல்லாம் முடிந்தபிறகு இராவணனின்னானென்றும் அவனுடைய ஊர் இன்னதென்றும் விவரமாகச் சொன்னான். இஃதன்றியும் கருணாநிதியாகிய இராகவன் விபீஷணனை அங்கீகரிக்கவொட்டாமல் பிடிவாதமாக அவன் தடைசெய்தது ஒரு பெரிய குற்றமாகும். அச்சமயத்தில் சுக்ரீவனை நோக்கி "விபீஷணன் இப்பொழுது அயோக்கியனா யிருந்தா லென்ன, நம்மிடம் வந்தபிறகு வெகுபேர்கள் யோக்கியர்களாய் ஆகிவிடுவார்கள்" என்று சுக்ரீவனுடைய முன் நிலைமையையும் பின்னரவன் யோக்யனாகமாறியதையும் விநயமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

ஹநூமான் இராமாயண சரித்திரத்தில் ஒப்பற்ற விசுவாசத்துடனும்பிரதாபத்துடனும் அநேக காரியங்கள் செய்ததாகக் கொண்டாடப்பட்ட போதிலும், அவனிடத்திலும் ரஜோகுணம் தமோகுணம் சில ஸமயங்களில் நிறைந்து அவனிடத்திலும் குற்றத்தை விளைத்தன வென்று வெளியாகின்றது. சீதையை அசோக வநத்தில் பார்த்துப் பேசிய பிறகு நீ என்முதுகில் ஏறிக்கொள்ளு, நான ராமனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன் என்று ஹநூமான் சொன்னான். அதைக்கேட்டு சீதை ("த்ஷேவவஉ-ெதஃெநருக்லீஸுமஹரி

யடுப்பவ" குரங்கு சுபாவத்தைக் காட்டிவிட்டாயே என்றாள். ஹநுமானோடு தான் வரக்கூடாது என்று ஸீதைபல காரணங்களைச் சொல்லிக் கடைசியாக

"புருஷனிடத்தில் பக்தியைப் பாராட்டிக்கொண்டு இராமனைத்தவிர வேறுபுருஷனுடைய தேஹத்தைத் தொடமாட்டேன், ராவணனுடைய பலாத்காரத்தினால் அவனுடைய சரீரம் என்னுடைய சரீரத்தில் படும்படி நேர்ந்ததற்கு நான் என்ன செய்வேன், என்னைக் காப்பாற்றுவதற்கு மநுஷ்யர்களில்லை, என்னுடைய நாதனை விட்டுப் பிரிந்து என் ஸ்வாதீன மற்றவளாக இருந்தேன்."

என்றுசொன்னவுடன் ஹநுமான் அதை ஒப்புக்கொண்டு யஜமானனிடத்தில் நான் கொண்டபக்தியினால்அவ்விதம் சொன்னேனே யன்றி வேறன்று என்று சமாதானமாகச் சொன்னான். சுந்தரகாண்டத்தில் இராவணனுடைய அந்தப்புரத்தின் வைபவங்களையும் அவனுடைய ஸ்திரீகள் அநுபவிக்கும் ஒப்பற்ற போகங்களையும் கண்டு "இந்தஸ்திரீகளெல்லாம் எப்படியிருக்கிறார்களோ அப்படியே ஸீதையும் அவர்களைப் போலவே அநுபவித்துக்கொண்டு இங்கேயிருந்தால் அவனுக்கு(இராவணனுக்கு)விசேஷந்தான்"என்றுஸீதையினுடைய உத்தம பிரபாவத்துக்கு விரோதமாக நினைத்து விட்டுப் பிறகுமறுபடியும் வருத்தப்பட்டுக்கொண்டு "ஸீதை உத்தமமான பதிவிரதையல்லவா. இந்த இராவணன் என்ன துஷ்டமான கெட்டகாரியத்தைச் செய்தான்" என்று நினைத்தான். பிறகு அவனுடைய வாலில்இட்ட அக்நியைக் கொண்டு இலங்கை முழுவதையும் அவன் எரித்த காலத்தில் இலங்கையிலேயே யிருக்கிற ஸீதையும் தஹிக்கப்படுவாள் என்னும் அறிவு அவனுக்கில்லை. பிறகு அதைப்பற்றி அவன் வருந்தும்போது தன்னுடைய காரியமானது கோபத்தால் விளைந்ததென்றும் அதினால் ஸீதையினுடைய நிலைமை மறக்கப்பட்டதென்றும் வியசநப்பட்டுகோபம் மிகுதியால் ஒன்றையுமாராயாமல்செய்துவிட்டேன். கோபமற்றவர்களே மகான்கள். கோபத்தாலல்லவோ சகல பாபமும் கேடும் விளைகின்றன. கோபத்தால் நான் கெட்டேன் என்று தன்னை இகழ்ந்துகொண்டு "ஐயோ ஸீதை நிச்சயமாகஇறந்திருப்பாள். நான் செய்த காரியங்களெல்லாம் வீணாய் முடிந்தன.

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

# புத்தகவரவு.

மதவிசாரம்:—இந்த உலகத்திலுள்ள பலமதங்களின் சரித்திரச்சுருக்கம் இது கோயம்புத்தூரிலிருக்கும் ஸ்ரீமாந் பகடால நரசிம்மலுநாயுடவர்களால் எளியதமிழ்நடையில் எழுதப்பெற்றது. பலமதங்களின் கொள்கைகளை, துவேஷபுத்தியின்றி, அந்தந்தமதத்தினர் சொல்லுமாறுபோல, நம்தேசத்தவர்க்குப் பயன்படுமாறு, நாயுடவர்கள் மிக்கஆராய்ச்சியுடனே திரட்டிப் புத்தகரூபமாகச் செய்துள்ளார்கள். இதின்கண், ஹிந்துமதத்தின் நாநாவிதமான ஸம்பிரதாய உட்பிரிவுகளும் தத்துவதர்சநங்களும், பௌத்த மதத்தின் உட்பிரிவுகளும், கிறீஸ்து மதத்தின்உட்பிரிவுகளும், முகம்மதிய மதத்தின் உட்பிரிவுகளும், சீனதேசத்திலும், ஜப்பான்தேசத்திலும் நடைபெறும் கன்பூஷிஸ் என்பாரின் ஒழுக்கமுறைகளும், ஷிண்டோமதமும், ஜோராஸ்தர்மதமும், யூதர்மதமும், Theosophy என்ற பிரஹ்மஞாந தர்சநமும், தெளிவாய் யாவரும் பொதுப்படையாக அறிந்து கொள்ளும்படி விவரிக்கப் பெற்றிருக்கின்றன. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். ஈசுவரன், ஜீவன், பிரபஞ்சம் இவைகளைப்பற்றியும், இவைகளுக்குள் நிகழ்கின்ற சம்பந்தங்களைப்பற்றியும், உலகத்திலுள்ள அறிஞர்களான மஹாபுருஷர்கள், அந்தந்த தேசத்தார், ஜாதியாரின் புத்திபக்குவத்திற்கு எற்ப ஒரே உண்மைகளைப் பல ரூபங்களாக உபதேசம் செய்துள்ளார்கள் எனவும் அறிவோம். "வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் மாறுபடும் கருத்தில்லை" எனத்தெளிவோம். இப்புத்தகம் இந்த ஸமரஸ புத்தியை உண்டுபண்ணக் கூடியது. இந்தப்புத்தகம் நம் தேசத்தில் முக்யமாக தென்னாடுகளில் உலாவவேண்டியது. எல்லாமதஸ்தர்களும் ஒருமைப்பட்டு வாழ்தல் முக்யமாகவிருக்கிறது. அவ்விஷயத்தில் இந்தப்புத்தகம் நலம் தரும்.

---

மணிமந்திர ஔடதம், திருக்குறள்மாட்சி, ஆன்மபோதம்:- இவை சிறிய புத்தகங்கள். தூத்துக்குடியிலிருக்கும் ஸ்ரீமாந் பொ. முத்தையபிள்ளை அவர்களியற்றியவை. முன்னவை இரண்டும், மதுரை வித்தியாபாநு என்ற தமிழ்ப் பத்திரிகையில் முதலில் வெளிவந்தன. அவைகள் மிகவும் உயர்ந்த ஞாநவிஷயங்களை வெளியிடுகின்றன. முக்யமாய், திருக்குறள்மாட்சி என்ற புத்தகம் நம்மவர் திருக்குறளைப் படிக்குமுன் ஒருமுறையேனும் கட்டாயம் வாசிக்கவேண்டிய அருமையான வியாஸம். திருக்குறளின் அருமை அப்போதுதான் நன்குபுலப்படும். இதன் விலை அணா 2 தான். ஆன்மபோதம் என்பது மதுரை செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்தது. ஆத்மலக்ஷணத்தை மிகவும் தெளிவாய் விவரிக்கிற ஒரு சிறிய வியாஸம். இதன் விலை அணா 1 தான். இவை இரண்டையும் மேற்படி முத்தையபிள்ளை அவர்களிடமிருந்து வேண்டுவோர் பெற்றுக்கொள்ளலாம்.

**மானிட ஜீவிய சிந்தாமணி:**—இது கும்பகோணம் டாக்டர் S. சந்திரசேகரர் அவர்களால் எளிய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இதின்கண் மனிதசரீரத்தின் அமைப்பும், கர்ப்போற்பத்தி விவரமும், வியாதிகளின் காரணமும், அவைகள்வாராமல் தடுக்கும் முறையும், வந்தமேல் சிகிச்சை பண்ணும் விதமும், ஸ்திரீகளின் பலவகைப்பட்ட வியாதிகளின் விவரமும் அவைகளை நீக்கும் முறையும்; ஆண்மையின் அழிவும் அதை அகற்றும் விதமும், பலசித்திரப்படங்களுடன் எழுதப்பெற்றுள்ளன. இப்புத்தகம் நம்மவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடியது. ஆங்கிலத் தமிழ்வைத்திய நூல்களினின்று அநேகநுண்ணியவிஷயங்களும் சமயோசிதமாக தமிழ்நூல்களினின்று மேற்கோள் கவிகளும் பலவிடங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன இதன்கண்ணடங்கிய விஷயங்களை நோக்கவும், அச்சு அமைப்பு, புத்தகக் கட்டடம் இவைகளை நோக்கவும், இதன் விலை ரூ 1—8—0 அதிகமன்று. வேண்டுவோர் மேற்படி டாக்டர் அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

---

**மனோதத்வ தீபிகை:**—இது காரைக்காலில் நடைபெறும் "காளமேகம்" என்பதின் பத்திராதிபரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருமான விச்சூர்முத்துக்குமாரசாமிமுதலியார் பி. எ. அவர்கள் இயற்றிய ஞானநூல். இது 126 விருத்தரூபமான பாடல்கள் அடங்கியது. இதன்கண் அடியிற் கண்ட விஷயங்கள்உள்ளன. நெஞ்சொடுசினத்தல், எல்லாஞ் சிவன்செயல் தற்றரிசனம், பூர்ணஞானம், மனவெண்ணங்களின் அபாரசக்தி, மரணம், ஆசாரசீர்திருத்தம், மோனநிலை. இவைகள் தமிழ்ப்பாஷையில் சொற்பப் பழக்கமுடையவனும் அறியும்படியான எளிய செய்யுள்நடையில் சொல்லப்பட்டிருக்கின்றன. "தன்னைத்தெளிந்து அறிந்து ஸச்சிதானந்தமயமாய் மன்னுவதே இந்நூலின்பயன்" என்பதினால் இந்நூலின் உயர்வும் வெளிப்படும். பண்டிதசிரோமணிகள் அநேகர் இந்நூலை சிலாகித்துப் பல பாக்களினால் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் லோகோபகாரியின் பத்திராதிபர் ஸ்ரீமாந் கொ. வடிவேலுசெட்டியார் அவர்கள் ஒரு சிறப்புப்பாயிரம் இந்நூலுக்கு எழுதியுள்ளார். இந்நூலை நம்மவர், முக்கியமாய், பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர் வாசிக்கவேண்டியது. இந்நூல் வசனநடையில் இருக்குமாயின், இன்னும் அதிகப் பிரயோஜனகரமாக இருக்கும். இக்காலத்தியரின் தமிழ்ப் பாஷையின் பயிற்சிக்கும் ஏற்ப, வசனநடையையே அநுஷ்டித்தல் நலமாம். இப்புத்தகத்தின் விலை ரூ 1 அதிகமானது. இது ஜனங்களுக்குள் பரவவேண்டுமாயின், இதன் விலை மிகவும் குறையவேண்டும்.

(Studies in Saiva Siddhanta) சைவசித்தாந்தத்தில் ஆராய்ச்சி:—இப்பெயருள்ள ஒரு புத்தகம் வெளிவந்திருக்கிறது. ஸ்ரீமான் நல்லஸ்வாமி பிள்ளை அவர்கள், சித்தாந்த தீபிகை முதலிய மாதாந்தப் பத்திரிகைகளில் பல சமயங்களில், சைவசித்தாந்த சம்பந்தமான விஷயங்களைப்பற்றி எழுதியிருந்த வியாசங்களைச் சில நண்பர்களின் விருப்பத்திற்கு இணங்கி, அவர் குமாரர் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் ஒருங்குசேர்த்து ஒரேபுத்தகமாக பிரசுரித்தம் செய்துள்ளார். இப்புத்தகத்திற்கு பிரஹ்மஸ்ரீ வி. வி. ரமணசாஸ்திரியார் Ph. D. ஒருமுகவுரை எழுதியுள்ளார். அவர்கள் இதன்கண் சைவ ஆகமசாஸ்த்ரங்களின் உயர்ந்த உண்மைகளையும் சைவ சித்தாந்தத்திற்கும், சைவஆகமங்களுக்குமுள்ள சம்பந்தத்தையும் மிகவும் தெளிவாயும் சுருக்கமாயும் அழகாயும் வெளியிட்டிருக்கின்றார்கள். ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் தாம் 20 வருஷகாலமாய் சிரத்தாபக்தியுடனே சைவசாஸ்திரங்களை ஆராய்ந்து, அவைகளில் சில விஷயங்களை யாவரும் எளிதில் அறியும்படிக்குப் பிரசுரித்தம் செய்த வியாசங்கள் மிகவும் உயர்நலமுள்ளவைகள். இப்புத்தகத்தை வெளியிட்ட ஸ்ரீமான் இராமநாதன் அவர்களுக்கும் இதற்கு முகவுரைஎழுதி ஸமர்ப்பித்த மகா-ள-ள-ஸ்ரீ ரமணசாஸ்திரியார் அவர்களுக்கும் அறிஞர் நன்றிபாராட்டக்கடவர். இப்புத்தகத்தை சைவஸமயத்தில் அபிமானமுள்ள யாவரும், முக்கியமாக, பிரஹ்மஞான சபையைச் சார்ந்த ஆங்கிலம் தெரிந்த அங்கத்தினர் ஒவ்வொருவரும் வாசித்தல் வேண்டும்.

---

சூத சங்கிதாஸாராம்ருத வசநம்:—சிவபுராணங்கள் பத்தினுள் சிறந்தது ஸ்காந்தம். அதனகண்ணுள்ள ஆறு ஸம்ஹிதைகளில் சூத ஸம்ஹிதை மிகவும் சிறந்தது. இச் சூதஸம்ஹிதையைப் பதினெட்டு முறை ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் படித்துத் தெளிந்தபின் மேல், வேதாந்த சூத்திரத்திற்கு அத்துவித பாஷியம் செய்தார் என்றால், இச்சூத ஸம்ஹிதையின் உயர் நலத்தை இன்னும் விவரிக்கவும்வேண்டுமோ? இதன் மூலகிரந்தம் ஸம்ஸ்கிருதபாஷையில் உள்ளது. இதைத்தமிழில் ஒருமஹாபண்டிதர் செய்யுள்ரூபமாக மொழிபெயர்த்துள்ளார். முன்னது ஸம்ஸ்கிருதபாஷையில் பயிற்சியுள்ளவர்களுக்கும், பின்னது தமிழ்பாஷையில் இலக்கண இலக்கியப் பயிற்சியுள்ளவர்களுக்கும், மாத்திரம் இவை பயன்படக்கூடும். இதன்கண் எல்லாரும் படித்தறியவேண்டிய தர்மாதர்மவிஷயங்களும், உபநிஷத்துக்களின் ஸாரமான ஞானவிஷயங்களும் யோக விஷயங்களும், விஸ்தாரமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றன. இவ்விஷயங்களை யாவரும் அறிந்து சன்மார்க்க முறையில் நடைபெறும் வண்ணம், சௌபாக்யவதி பால சரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள், தம்முடைய பிதா ஸ்ரீ சிவாநந்த

சாகர யோகீசுவரர் அவர்களிடமிருந்து கேட்டுணர்ந்தபடி எளிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். இதை சென்னை, திருவல்லிக்கேணி ஸ்ரீ பால சுப்பிரமணியன் கம்பெனியார் பிரஸித்தம் செய்திருக்கின்றார்கள். இப்புத்தகம் மிகவும் உபயோகமானது. ஞானவிஷயங்கள் சுருக்கமாயும் தெளிவாயும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ -தான். வேண்டுவோர், ஷை கம்பெனியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

வல்லீபரிணயம்:—இது ஒருபுதிய தமிழ்நாடகம். மதுரையில் பிரஹ்மஸ்ரீ சூரியநாராயணசாஸ்திரியார். B. A. என்ற ஒரு சிறந்த தமிழ் வித்வானும், கவிஞருமான ஒருவர் இருந்தார். அவர் ஆங்கிலத்திலும் நிபுணர். அவர் புதிய புதிய மாதிரியான செய்யுள்களையும், புதிய புதிய மாதிரியான இலக்கியங்களையும் இயற்றி பிரக்யாதிபெற்ற அற்புதமான வித்வான். அவர் அநேகரைத் தம்முடைய மாணாக்கராக அமைத்துக்கொண்டார் அவர்களில் மகா-ள-ள-ஸ்ரீ கூடலூர் ந. பலராமையர் அவர்கள் சிறந்த மாணாக்கராவார். இவர்கள் இந்நாடகத்தை இயற்றியவர். இதின்கண் தமிழ்பாஷையின் இனிய சுவை நிரம்பியுள்ளது. இதன் அழகான வசன நடையும், இனிமையான செய்யுள்நடையும், இரம்மியமான கற்பனைகளும் மணிகள்போன்ற பழமொழிகளும், படிப்பவர் மனத்தை சந்தோஷிப்பிக்கும் தன்மையன. தமிழில் நாடகவியல் பொய்த்துப் போயிருக்கும் சமயத்தில் பல அறிஞர்கள் முன்வந்து நாடகவியலைத் திரும்பத் தமிழ்பாஷையில் ஏற்படுத்த முயன்றுவருகிறார்கள். அப்புண்ணியரில் இந்நாடக கர்த்தா ஒருவராவர். இவர் புராணங்களிலிருந்து கதைகளை எடுத்து இதுபோன்ற நாடகஇலக்கியங்களை நமது தமிழ் பாஷைக்குத் தந்தருள்வாராக. இந்நாடகத்தை மகா-ள-ள-ஸ்ரீ காரைக்குடி சித. நாகப்பசெட்டியார் அவர்கள் அச்சு இயற்றி பிரஸித்தம் செய்துள்ளார். இவர்களின்பேருதவி மிகவும் மெச்சப்பாலது. இப்புத்தகத்தைப் படித்து ஆநந்திப்போர் ஒவ்வொருவரும் செட்டியார் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடவர். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் விஸ்தாரமாய்ச் செய்துவரும் புண்ணியகர்மங்களில், தமிழ்பாஷையை ஆதரித்தும் அதன் வித்வான்களுக்கு ஊக்கத்தை உண்டுபண்ணுவதும் ஒரு பெரிய தர்மமென மதிப்பாராகில், தமிழ் பாஷையை ஆதரிப்பாரில்லையே என்ற குறை சீக்கிரம் நீங்கிவிடும். அவ்விதமே ஈசன் செய்வானாக.

## சமாசாரம்.

---

மைலாப்பூர் ஸம்ஸ்கிருத வித்யாசாலை:—இந்த வித்யாசாலையின் சென்ற 1911ஞுத்திய வரலாற்றுப் பத்திரிகை பெற்றோம். காலம் சென்ற கனந் தங்கிய வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் தருமங்களில் இது

முக்யமானது. இக்கல்லூரிக்கு மூலதநம் பிரகிருதத்தில், ரூ 68,450 உள்ளது. கவர்ண்மெண்டார் வருஷத்திற்கு ரூ 1000, கொடுத்து உதவுகின்றார். மொத்தம் வருவாய் சென்ற வருஷத்திற்கு ரூ 8681. செலவு 8786-13-2, வரவுக்கு மேல் சொற்பச்செலவு அதிகமாக இருக்கிறது. சென்னை சர்வகலாசாலையின் சிரோமணி பரீக்ஷைக்கு, இந்த வித்யாசாலையை தகுந்த சாதநமாக சர்வகலாசாலையார் (University) அங்கீகரித்திருக்கின்றனர். சென்ற வருஷத்தின் ஆரம்பத்தில் 21 மாணாக்கர்கள் வித்யாசாலையில் இருந்தார்கள். வருஷமுடிவில் *31 மாணவர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு போஜநம் போட்டு படிப்பு கற்பிக்கப்படுகிறது. இப்போது இவ்வித்யாசாலையில் கற்பிக்கும் வித்யா விஷயங்களாவன. (1) வேதபாஷ்ய வகுப்பு (2) வேதாந்த வகுப்பு (3) பூர்வமீமாம்ஸை வகுப்பு (4) ஸ்மிருதி வகுப்பு. சென்றவருஷத்தில், இந்நான்கிலும 11 பெயர்கள் தேரி யோக்யதா பத்திரம் பெற்றிருக்கின்றார்கள். இந்த உயர்தர ஸம்ஸ்கிருத வித்யாசாலை மேன்மேலும் அபிவிருத்தியாகி ஜநங்களுக்கு உபகாரம் செய்விக்குமென நம்புகிறோம். மதுரை ஜில்லாவில் எத்தனையோ வேதபாடசாலைகளும், சாஸ்திர பாடசாலைகளும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களால் நிருவப் பெற்று நடைபெறுகின்றன. எத்தனையோ லக்ஷக்கணக்கான திரவியங்கள் அவைகளுக்குச், செலவழிக்கப்படுகின்றன. மைலாப்பூர் ஸம்ஸ்கிருத வித்யாசாலையைப் போல் சரியான விசாரணையில் இவைகள் இருக்குமாகில் எவ்வளவோ நலம் தரும்படியாக இப்பாடசாலைகளைச் செய்விக்கலாம். தாராளமாகப் பணத்தைச் செட்டிமார்கள் செலவழிக்கின்றார்கள். ஆனால் செலவுக்குத் தகுந்த பிரயோஜநம் இருக்கிறதாக நாம் சொல்லமுடியாது. நம் ஜில்லாவிலும் இராமநாதபுரம் ஜில்லாவிலுமுள்ள பாடசாலைகளை ஒழுங்குப் படுத்தியும் ஒரு கமிட்டியின் விசாரணைக்குட் படுத்தியும் அவைகளில் நடைபெறும் வித்யா விஷயங்களை சோபாநமுறையாகக் கிரமப்படுத்தியும், செட்டிமார்களில் முக்யஸ்தர்கள் முன் வந்து செய்வார்களாகில் மிகவும் நலமாக இருக்கும். இகத்தில் கீர்த்தியையும், பரத்தில் புண்ணியத்தையும் அவர்கள் அதிகமாகப் பெறுவார்கள். அவ்விதம் செய்யவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

---

அக்டோபர்மீ 1 தேதியில், திருவனந்தபுரம் அநந்தலாட்ஜில் ஸபா தலைவர் மாதஸ்ரீ பெஸண்டு அம்மையின், 65-ம் ஆண்டு நிறைவை, மிக விமரிசையாகக் கொண்டாடினார்கள். ஏழைகளுக்கு அன்னம் இடப்பட்டன. அம்மையின் உயர்நலம் அமைந்த பல துறைகளிற் கைங்கர்யங்களைப்பற்றி உபந்யாசங்கள் நிகழ்ந்தன.

மாதுஸ்ரீ பெஸண்டு அம்மை சென்னப்பட்டணத்திற்கு இந்த மாசம் 23-ம்தேதி வருகிறார்கள். அப்போது, சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள, பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின் அக்கிராஸனாதிபதியும் காரியதரிசியும் அம்மையின் நல்வரவுப்பத்திரிகை (Welcome Address) ஒன்றை வாசிப்பார்கள். அவ்விதமே நமது ஞான சகோதரர் ஸ்ரீமான் லெட்பீடர் அவர்கள் ஆதியாருக்குத் திரும்பிவருங்காலத்தில் அவர்களுக்கு ஒரு நல்வரவுப்பத்திரிகையும் வாசிக்கப்பெறும்.

---

மைலாப்பூரிலுள்ள வேங்கடரமணவைத்தியசாலையும் ஆயுர்வேத பாடசாலையும்:—இவ்விரண்டு தர்மங்களும், காலஞ்சென்ற கனந்தங்கிய வி. கிருஷ்ணஸ்வாமிஐயர் அவர்களால், இதற்கு ஆறுவருஷத்திற்கு முன்னர் ஸ்தாபிக்கப்பெற்றன. இவைகளின் 6-வது வருஷத்து வரலாறு அறிக்கைப்பத்திரிகையைப்பெற்றோம். இந்த இரண்டுதர்மங்களும் நன்றாய்நடத்தப்பட்டுவருகின்றன. இவைகளை ஸ்தாபித்தவர் இப்போது இல்லையென்ற பெரிய வியசனம் எல்லாரும் கொள்ளக்கூடியதே. இவைகளைக் கண்ணிமைபோல் ஆதரித்து நடத்துகின்றவர் மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர். வ. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்கள். இவர்கள்இப்போது பென்ஷன்பெற்றதம்முடைய காலமுழுமையையும் இத்தர்மங்களை விசாரணை செய்வதில் செலவழித்துவருகின்றார்கள். சென்ற 1911ஞூத்தில் வைத்தியசாலையில், மருந்து முதலியது பெற்று வைத்தியம் செய்து கொண்டவர்களின் மொத்தத்தொகை, 40,255. வைத்தியசாலைக்கும் ஆயுர்வேத பாடசாலைக்கும் இப்போதுள்ள மூலதனம் ரூ 31,000தான். அதன்வட்டியினின்றும், வைத்தியசாலையின் மருந்துகளை விற்பதாலும் சிலபிரபுக்களின் நன்கொடையாலும் சென்ற ஞூத்தில் மொத்தவரும்படி 5569-ரூபாய். இத்தகையதர்மங்களுக்கு இந்தவருவாய் போதாது. நம்தேசத்திலுள்ள செல்வர்கள் இத்தர்மங்களுக்கு உதவிபுரிய வேண்டும். தவிரவும், ஒவ்வொரு ஜில்லாவின் பிரதானநகர்களில் ஆயுர்வேதவைத்தியசாலையும் பாடசாலையும் ஸ்தாபிக்கப்பெற்று நடைபெறவேண்டும். பிறர் பிணிதீர்த்தல் அறமெனத்தகும். இப்பாடசாலையில் படித்துத்தேர்ந்த வைத்தியர்களை நம்மவர் ஆதரிப்பார்களேயாகில், சுதேச வைத்தியம் மேன்மேலும் விருத்திபெறும். ஆங்கிலவைத்தியம் அதிகசெலவுள்ளது. மேலும் அதில் உபயோகிக்கப்பட்டுவரும் மருந்துகள், நம் தேசத்தினரின் சரீரத்திற்கு அவ்வளவாகப் பொருத்தமில்லை. பிரயோஜனகரமாகவுமில்லை என அறிஞர் அபிப்பிராயம். தனவைசியர்களான நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் எத்தனையோ தர்மங்கள் செய்துவருகிறார்கள். இந்த வைத்தியவிஷயத்தில், தங்களுடையதிரவியத்தையும், தர்மசிந்தனையையும் சொற்பமேனும் செலுத்துவார்களாகில் இத்தேசம் நலம்பெறும்.

சூரியவெப்பத்தினுல் சமுத்திரத்தி லிருக்கின்ற ஜலமானது நீராவியாகி ஆகாசத்திற் கிளம்பி குளிர்ந்த காற்று அதின்மேல்பட மேகமாகப் பரிணமிக்கிறதென்று நாமெல்லோரு மறிவோம். இவ்விதம் ஆவி யாகமாறுங் காலத்தில் சிலபாகம் ஆக்ஸிஜன் (பிராணவாயு) ஹைட்ரோஜன் என்ற ஆவிகளாகப் பிரிக்கப்படுகிறது என்றும், அப்படிப்பிரிந்த ஆவிகள் திரும்பவும் ஒன்றுபடாமல் தனித்தனி நிலையில் ஆகாசத்தின் உயர்ந்த ஸ்தானத்திற்குப்போய்ப் பரவுகிறதென்றும் ஒருஜர்மானியதேசத்து ரஸாயந சாஸ்திரி பரீக்ஷயினுல் சித்தாந்தப்படுத்தியிருக்கிறுர். இச்சித்தாந்தம் உண்மையாயிருக்குமாகில் பூமியின் மேற் பரப்பிலுள்ள ஜலம் வரவரக் குறைந்து முடிவில் பொய்த்துப்போகும் என்றும், எல்லா ஜலமும் ஆக்ஸிஜன் ஹைட்ரஜன் என்ற இரண்டாவிகளான பூர்வநிலையில் ஒடுங்கும் என்றும் அறிஞர்கள் கருதுகிறுர்கள்.

---

சென்ற செப்டெம்பர்மீ 21-22-உகளில், தூத்துக்குடியில் கூடிய பாண்டியநாடு பிரஹ்மக்ஞாந கிளைச்சபைகளின் கூட்டம் நன்ருய் நடைபெற்றது. ஸ்ரீமாக் வாடியா என்பவர்களின் உபந்யாஸம் மிகவும் பிரயோஜநகரமாக இருந்தது. மகா-௱-ள-ஸ்ரீ எ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அதிதிதர்மத்தை மிகவும் சிரத்தையுடனே நடத்தினுர்கள்.

---

அதே தேதிகளில், கோயம்புத்தூர் ஜில்லா பிரஹ்மக்ஞாந கிளைச்சங்கங்களின் கூட்டம் திருப்பூரில் கூடியது. அநேகபுத்திமான்கள் உபந்யாசம் செய்தார்கள். மாது ஸ்ரீ காகரின் என்பார் அக்கிராஸநம் வகித்தார். மிகவும் உத்ஸாகத்துடனே உபந்யாஸம் செய்தார்.

---

**மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாரின் சரித்திரச்சுருக்கம்:**-நாளிது அக்டோபர்மீ 1உ அந்நிபெஸண்டு அம்மையாரின் 66-ம் ஆண்டு ஆரபபத்தை உத்தேசித்து அம்மையாருடைய உருவப்படத்துடன், அம்மையாரின் சரித்திரத்தையும் அவரால் உலகத்திற்கு நடத்தப் பெற்று வரும் உயர்கலமைந்த கைங்கர்யத்தையும் சுருக்கமாய் எளிய தமிழ் நடையில் எழுதி மதுரை பிரஹ்மக்ஞாநக் கிளைச்சபையின் பிரெஸிடெண்டு ப. நாராயணஐயரவர்கள் பிரஸித்தம் செய்திருக்கிறுர்கள். இதன் விலை 1 அணுத் தான். இதை யாவரும் வாசிக்க வேண்டுவதவசியம்.

**மின்சாரமும் உணவும்:**—மின் சாரத்தின் உதவியால் சரீர போஷணத்திற்காக காமுட்கொள்ளுமுணவை முற்றும் தவிர்க்கலாம் என மேல் நாட்டில் உள்ள "பர்கோனி" என்ற மின்சார சாஸ்திரி சில உபாயத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். உணவு உட்கொள்ளுதல் சரீரத்திலுள்ள அவயவங்கள் அபிவிருத்தியாவதற்கும், சரீரத்தின் கண்ணுள்ள கரணங்கள் தொழிற்படுதலுக்கு சாதனமாயுள்ள உஷ்ணத்தை யுண்டுபண்ணுதலுக்கும் தான். இவ்விரண்டு காரியங்களையும் மின்சார சக்தியை (Electricity) சரீரத்தில் புகட்டுவதினால் சரீரத்திற்கு எவ்விதஹானியும் நேரிடாமல் சரீரம் நலம பெறும்படி செய்யலாம் என்கிறார். முக்கியமாய் வியாதிஸ்தர்கள் பலம் குன்றி அசக்தர்களாக இருக்கின்ற நிலைமையில் உணவையுட்கொள்ளாமல், இவ்வித மின்சாரப் பிரயோகம் நலந்தருமாம். இவ்வித மின்சாரப் பிரயோகத்தினால் தேகத்தில் முன்னரைவிட அதிக சதை வைக்கும் என பரீக்ஷையினால்தான் கண்டுபிடித்து இருக்கிறதாகவும் சொல்லுகிறார். மின்சார சக்தியைப் புகட்டுவதினால் பயிர் பச்சைகள், விருக்ஷங்கள், பிராணிகள், மானிடரைவிடத் தாழ்ந்த ஜீவராசிகள் தாம் அதிக உணவை உட்கொண்டு அவைகளின் சரீரங்கள் அபிவிருத்தியடைகின்றனவாகக் கேள்விப்படுகிறோம். உணவையே பூரணமாய் வர்ஜித்தலுக்கு மின்சாரசக்தி உதவுதல் ஒரு புதுமை. முற்காலத்தில் தங்களுடைய பிராணாயாம சக்தியால் பூர்த்தியாக உணவையே விட்டு ஆகாசத்திலுள்ள திரவியத்தை ஸ்வீகரித்துக்கொண்டு அநேகவருஷங்கள் ரிஷிகள் தபஸ்செய்தார்களெனக் கேள்விப்படுகிறோம். அந்தசௌகரியத்தை மின்சாரசக்தியால் யாவரும் இக்காலத்தில் பெறலாம் போலும்!

---

ஆறுவாமொழியில் ஸ்கந்த லாட்ஜில் காளிதி ஸ்ரீ 6வயில் பிரஹ்மக்ஞான சபையின் அங்கத்தினர்கள் கூடினார்கள். பிரஹ்மக்ஞான சங்கத்தின் அருமை பெருமை, பக்தி, 'சித்தநிரோதம்,' 'ஞானயோகம்,' 'மநச்சக்தி,' 'குருதத்வம்,' இவைகளைப் பற்றிய உபந்நியாஸங்களும், ஹரிகதை காலக்ஷேபமும் பல அறிஞர்களால் நடைபெற்றன.

பத்திராசபா.

---

ஒரேசமயத்தில் என்றால் யாதொரு ஸாதகமுமின்றி, முறையுமின்றி ஒரே காலத்தில் நினைத்த மாத்திரையில் எல்லா விஷயங்களையும் அறிகிறான், அதாவது ஸர்வக்ஞன் என்றபடி.

55. 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌾𑌮𑍍𑌯𑍇 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌮𑌿𑌤𑌿॥

புத்தியானது புருஷனைப் போன்று பரிசுத்தமடையும் காலத்தில் கைவல்யம் உண்டாகும்.

குறிப்பு:—கைவல்யம், தன்னிலையிலிருந்தல். ஸத்துவம், அதாவது புத்திதத்வம், அதில் புருஷன் பிரதிபிம்பிக்கிறான். ஸத்வம் தான் ஞாநத்திற்கும் அகங்காரத்திற்கும் காரணம். அதுவே அந்தக்கரணம். அது சலனமற்று ஒப்வையடைந்து ஸமாதானமான நிலையிலிருக்கும்போது புருஷனைப் போல் ஸ்வரூபமடைகிறது. விஷயங்களைப் பற்றாமல் அந்தக்கரணம் அழிந்தாற்போல இருக்கின்ற நிலைமையில் புருஷன் பிரஹ்மாதி ஸ்தப்ப பரியந்தமுள்ள எந்த வஸ்துவினுடைய அபேக்ஷையுமில்லாமல் ஸ்வதந்த்ரனாகிறான். ஆநந்த ஸ்வரூபியாகிறான். அதுவே கைவல்யம்.

விபூதிபாதம் முற்றிற்று.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 4-வது கைவல்யபாதம்.

[குறிப்பு:—இந்த பாதத்திற்கும் முந்திய பாதங்களுக்குமுள்ள சம்பந்தம் என்னவென்றால், முதலாம் பாதத்தில் யோகம் இன்னது என்பதும் இரண்டாம் பாதத்தில் யோகஸாதனங்களும், மூன்றாம் பாதத்தில் ஒரு அப்யாஸி அநுஷ்டிக்கும் ஸாதனங்கள் நேர்மையாக நடைபெறுகின்றனவா அல்லவா என்பதைப் பரீக்ஷித்துக்கொள்ளுகிறதற்கும் அதனால் யோகாப்யாஸத்தில் ருசி உண்டென்னும் இயல்பினவான யோகஸித்திகளும், சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அத்யாயத்தில் யோகத்தின் பலனான கைவல்யமும் தர்மமேக ஸமாதியும் இன்னும் சில விஷயங்களும் சொல்லப்படுகின்றன.]

**1.** ஜந்மௌஷதிமந்த்ரதப:ஸமாதிஜா: ஸித்தய:॥

ஜாதியாலும் (பிறப்பாலும்) ஔஷதங்களினாலும், மந்த்ரத்தினாலும், தபஸ்ஸினாலும், ஸமாதியினாலும், (முன்சொன்ன) சித்திகள் உண்டாகின்றன.

குறிப்பு:—தேவனாகப் பிறந்தவனுக்கு ஜந்மத்தினாலேயே அணிமாதி ஸித்திகள் ஏற்படுகின்றன. மேலும் போன ஜந்ம கர்ம விசேஷத்தினால் அத்தகைய ஸித்திகள் ஏற்படக்கூடும். ஸாங்கிய சாஸ்திரத்தை உபதேசித்த கபில மஹரிஷி பிறக்கும்போதே ஸித்தராகப் பிறந்தாரென்று சொல்லப்படுகிறது.

மாண்டவ்யர் முதலிய முநிகள் ஔஷதங்களினால் ஸித்திகளைப் பெற்றார்கள். தமிழ்நாட்டில் ஔஷதங்களினால் ஸித்திபெற்றவர் அநேகர் இருந்திருக்கிறார்கள். ஔஷதத்தினால் காயஸித்தி பெற்றவர்கள் ரஸாயநர்கள் என்று பெயர் பெறுவார்கள். பிறந்து இறந்து புதிது புதிதாய் சரீரங்களையெடுக்கிறதைப் பார்க்கிலும் எடுத்த சரீரத்தை நீடித்தகாலம் சிரஞ்சிவியாக இருக்கும்படி செய்தல் கூடும் என்பது இவர்களின் மதம். வாலரஸத்திலும் கந்தகத்திலும் அதிக அத்புதமான சக்திகள் அமைந்திருக்கின்றன என்பது இவர்களின் கொள்கை. சில சில மூலிகைகளுக்கு ஸித்திகள் ஸாதிக்கக் கூடிய யோக்கியதைகளுண்டென்றும் இவர்களுடைய ஸித்தாந்தம். இவைகளினால் தங்கள் காயத்தை சிரஜீவியாக இருக்கும்படி செய்த

வர்கள் அநேகர் இருக்கிறார்கள் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். மந்த்ரங்களும் இத்தகைய ஸித்திகளைக் கொடுக்க இயலும் என்று சிலர் அபிமதம். சரியான முறையாய் மந்த்ரங்களை ஜபிக்கும் பக்ஷத்தில் ஸித்திகள் கைகூடும். விச்வாமித்ரர் முதலியவர்கள் தபஸினாலும், மந்த்ரத்தினாலும் ஸித்திபெற்றவர்கள். தபஸ் என்றால் விரதங்களினால் காயக்லேசம் செய்தல். ஹடயோக முறைகளும் இதில் அடங்கும். ஸமாதி அல்லது சித்த ஐகாக்ரியம், இதுதான் பதஞ்சலியாருடைய அபிமதம். இதைப்பற்றித்தான் இந்த சாஸ்திரம் கிளம்பிறது. இதுதான் உண்மையான யோகமுறை.

2. ஜாத்யந்தரபரிணாம: ப்ரக்ருத்யாபூராத் ॥

(மூல) பிரகிருதியினுடைய பிரவேசத்தினால், (வேறு) ஜாதிப் பரிணாமம் உண்டாகும்.

குறிப்பு:—ஒரு ஜந்மத்தில் பிறந்தவன் வேறு சரீரத்தைப் பெறுதல் எங்ஙனம்? அதன் முறையை அடுத்த சூத்திரத்தில் சொல்லுகிறார். அதன் தத்துவத்தை இதில் உபதேசிக்கின்றார்.

3. நிமித்தமப்ரயோஜகம் ப்ரக்ருதீநாம் வரணபேதஸ்து
ததः க்ஷேத்ரிகவத் ॥

வேறு தேஹம் உண்டாவதற்கு ஹேதுவான பிரகிருதி அணுக்களை (புண்ணிய கர்மங்களான) நிமித்தம் உண்டாக்குகின்றதில்லை, ஆனால் (திவ்ய தேஹத்தை அடைவதில்) தடைகளைப் புண்ணிய கருமமானது குடியானவன் போல, நீக்கிவைக்கின்றது.

குறிப்பு:— ஒரு குடியானவன் ஜலத்தை வயலுக்குப் பாய்ச்சும் கர்மத்தில் தடைகளை மாத்திரம் விலக்குகிறான். பின்னர் ஜலம் ஓடுகின்றது. அம்மாதிரியாகவே புண்யகருமம் திவ்ய தேஹப் பிராப்திக்குத் தடையாயிருக்கும் இடையூறுகளை விலக்குகின்றது. ஒவ்வொரு ஜீவராசியிலும், ஒவ்வொரு மனிதனிடமும், பரிபூர்ணமான புருஷன் உண்டாகும்படியான சக்திகள், யோக்யதாம்சங்கள் குப்தமாக விருக்கின்றன. ஔஷதியினிடம் பிராணிகளாகும் அம்சமும், பிராணிகளிடம் மிருகமாகும் அம்சமும், மிருகத்தினிடம் மனிதனாகும் அம்சமும், மனிதனிடம் தேவனாகும் அம்சமும்,

குப்தமாக அமைந்திருக்கின்றன. அந்த மறைப்பான தடையை விலக்கவே, விகாஸம் படிப்படியாக உண்டாகும். நற்கருமங்கள் அவ்விடையூறான தடையைத் தவிர்க்கும்.

4. 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 ॥

(தன்னுடைய ஸித்தியால்) உண்டுபண்ணப்பட்ட சரீரங்களில் (யோகியானவன்) அஹங்காரத்திலின்று மாத்திரம் பல மநஸ்களை (உண்டுபண்ணுகிறன்.)

குறிப்பு:—மேற்கண்ட தடைகள் தபஸ் முதலானவைகளால் நீக்கப்பெறவே யோகியானவன் ஒரே சமயத்தில் பல விஷயங்களை அநுபவிக்க விரும்பிப் பல சரீரங்களை உண்டுபண்ணிக்கொண்டால் அவைகளில் தனித்தனி ஒவ்வோர் மநத்தையும் நிர்மாணம் செய்து கொள்ளுகிறான். அம் மநஸ்களை எதினின்று நிர்மிக்கிறனென்றால் அஸ்மிதையி (அகங்கார தத்துவத்தி) னின்று என இந்த சூத்திரம் உபதேசிக்கின்றது.

விஷ்ணுபுராணத்தில் வருகின்ற சௌபரியின் கதை இங்கு கவனிக்கத்தக்கது. இத்தன்மையான யோகி மஹத்தத்துவத்தை ஜயித்தவன். அகங்காரம் மஹத்தத்துவத்தினின்று உண்டாகிறது.

5. 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑍇 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑌂
𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍇𑌕𑌮𑌨𑍇𑌕𑍇𑌷𑌾𑌮𑍍 ॥

(பல மநஸ்கள் உண்டாக்கப்படுகின்றமையால்) பல பிரவிர்த்தி பேதங்கள் ஏற்பட்டாலும் ஒரே சித்தமானது (அஸ்மிதை, மேற்கண்ட) பல மநஸ்களை நடத்துகிறது.

குறிப்பு:—ஒரு சரீரம் மனிதன், ஒரு சரீரம் மிருகம் இவ்விதமாக இருந்தாலுங் கூட (அஸ்மிதை) நான் என்ற ஒரே பிரத்யயம் எல்லாவற்றிலு மிருக்கின்றமையால் பல மநஸ்கள் பல சரீரங்களிலிருந்தாலும் தோஷமில்லை. ஒரே சரீரத்தில் பல இந்த்ரியங்களிருப்பினும், ஒரே மநஸ் அவைகளின் அநுபவங்களையெல்லாம் ஒன்றுபடுத்துகின்றது, தன்மயப்படுத்துகின்றது. அதுபோல யோகி

யானவன் பல சரீரங்களையும் அவைகளின் கண் பல மநஸ்களையும் உண்டுபண்ணிக்கொண்டு அவைகளின் மூலமாய் ஏற்படும் அநுபவங்களைத் தந்மயப்படுத்துகிறான்.

இவ்வர்த்தத்தை வைத்துக்கொண்டு, "ஒரே சரீரத்தில் இரண்டு பக்ஷிகள் உண்டு. ஒன்று போக்தா. மற்றொன்று ஸாக்ஷீ" என்ற வசநத்தை ஒருவிதமாகப் பொருள் கொள்ளலாம்.

"ஒரே ஈச்வரன் தம்முடைய மநஸ் ஸங்கல்பத்தால் பல சரீரங்களை உண்டுபண்ணுகிறான், அவைகளை நடத்துகிறான், பின்பு அவைகளைத் தன்னிடம் லயப்படுத்திக்கொள்ளுகிறான்."—பத்மபுராணம்.

இவ்வபிப்பிராயம் இங்கு கவனிக்கத்தக்கது. இதுபோல யோகியும் செய்கிறான்.

6. தத்ர த்யாநஜமநாஶயம்॥

அவைகளில் (ஜந்மம், மந்த்ரம், ஔஷதம், தபஸ், ஸமாதி முதலான முறைகளின்படி கற்பிக்கப்படும் மநஸ்களில்) ஸமாதியினால் ஏற்படும் மநஸ்ஸுக்கு மாத்திரம் (ராகாதிகள், புண்யபாபங்கள் தங்க) உறைவிடமிராது. (மற்றைய மநஸ்களில் தங்க இடமுண்டு.)

குறிப்பு:—தியாக ஸமாதியால் ஏற்படுத்தப்படும் மநஸ்களில் ராகாதிகள், புண்ய பாபங்கள் தங்க இடம் கிடையாது.

மந்த்ரத்தினாலும், ஔஷதத்தினாலும், காயக் கிலேசமான தபஸ்ஸினாலும் உண்டுபண்ணப்படும் மநஸ்ஸுக்கும், ராகாதிகள், புண்ணிய பாபங்கள் இருக்கின்றன. அம்மநஸானது ஆசைபற்றியதாகவே இருக்கும்.

7. கர்மாஶுக்லாக்ருஷ்ணம் யோகிநஸ்த்ரிவிதமிதரேஷாம்॥

யோகிக்கு கர்மங்கள் வெளுப்பு கறுப்பு என்பது இல்லை. மற்றவர்களுக்கு (கறுப்பு, வெளுப்பு, இரண்டும் கலந்தவை என) கர்மங்கள் மூன்றுவிதம்.

குறிப்பு:—முன் ஸூத்திரங்களில் யோகியின் சித்தம் மற்றவர்களுடைய சித்தத்தைவிட வேறானது என்று சொன்னார். இதில் அவன் கர்மமும் மற்றவர்களுடைய கர்மத்தைவிட வேறானது என்கிறார்.

கர்மங்கள் நான்கு விதம்:—

(1) தமோகுணத்தை விருத்தி பண்ணுகிறது.

(2) ஸத்துவகுணத்தை விருத்திபண்ணுகிறது.

(3) ரஜோகுணத்தை விருத்திபண்ணுகிறது.

(4) முக்குணங்களைத் தாண்டியநிலை.

கிருஷ்ணம்: இஹத்தில் துக்கத்திற்கும், பரத்தில் நரகத்திற்கும் ஹேதுவான கர்மம்.

சுக்லம்: (மநம், வாக்கினால் ஏற்படும் புண்ய கர்மம்) இஹத்திலும் பரத்திலும் சுகத்திற்குக் காரணமான கர்மம்.

சுக்லகிருஷ்ணம்: (புண்ய பாபம் கலந்தது) ஸாங்கியர்களின் மதப்படி ஸோமயாகங்கள் முதலியன.

சுக்லகிருஷ்ணமில்லாதது: அதாவது புண்யபாபமில்லாதது.

முதல்மூன்று ஸாதாரண ஜநங்களின்கர்மம். 4-வது யோகியின் கர்மநிலை. அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் என்ற கிலேசங்கள் இன்மையாலும், கர்மபல ஸந்யாஸம் செய்கின்றமையாலும், யோகிக்குக் கர்மமிருந்தாலும் புண்ய பாபத்தின் பலாநுபவமில்லை. தைத்திரீய உபநிஷத் 2-ம் வல்லியிற் கடைசி அநுவாகத்திற் சொல்லியபடி "நான் புண்ய கர்மத்தைச்செய்யவில்லையே பாபகர்மத்தைச் செய்தேனே" என்ற தாபம் இல்லாத நிலையுள்ளவனாக யோகி ஆகிறான் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

இந்த நிலையை அடியில் வரும் வசநங்களும் தெளிவிக்கின்றன.

"ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவானேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:"

இதன் பொருள்: "பிரஹ்மவித் ஆனவன் ஆத்மாவிடம் கிரீடிக்கிறவனாகவும், பிரியமுள்ளவனாகவும், அசுக்லாகிருஷ்ண கர்மமுடையவனாயுமிருக்கிறான்."

𑌕𑌾𑌯𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑌰𑍈𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌪𑌿 ।
𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌂𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

இதன் பொருள்: "யோகிகள் சரீரம், மநம், புத்தி, இந்த்ரியங்களால் மாத்ரம் ராகம் முதலியவை யில்லாமல் ஆத்மஞாநத்தின் பொருட்டுக் கர்மத்தை யநுஷ்டிக்கிறார்கள்."*

மேல் விவரித்த இந்த நிலைமைக்கு யோகி வருவானாகில் பிரகிருத ஜந்மம் அவனுக்குக் கடைசி ஜந்மமாகும்.

8. 𑌤𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌾𑌨𑌾
𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌾𑌸𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

(மேற்கண்ட மூதல் மூன்றுவித)கர்மங்களினின்று அந்தந்த கர்ம பரிபாகத்திற்கு அநுகூலமான வாஸனைகளின் மலர்ச்சி ஏற்படும்.

குறிப்பு:—வாஸனைகள் இருவிதம், (1) ஜாதி, ஆயுஸ், போகம் இவைகளைக் கொடுக்கும் வாஸனை (2) வெளிவராமல் ஸம்ஸ்கார ரூபமாக மாத்ரம் இருக்கின்ற வாஸனை. முன் வினைப் பயனை அநுபவிக்க நேரிடும் சமயத்தில் இரண்டாவதான வாஸனைகளில் அவ்வினைப் பயனுக்கு அநுகூலமான வாஸனை மாத்திரம் வெளிப்படும், மலரும். மனிதனைப் பிறக்கும் காலம் வந்திட, தேவ, நரகர் ஸம்பந்தமான வாஸனைகள் வெளிவாரா. மனிதனைப் பிறத்தலுக்கு அநுகூலமான கர்ம வாஸனைகள் மாத்திரம் பிராதுர்பாவத்தை யடையும். அவ்விதமே தேவ ஜந்மம் நேரிடும் காலத்தில் மனித சம்பந்தமான வாஸனைகள் வெளிவரா.

9. 𑌜𑌾𑌤𑌿𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌂
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌯𑍋𑌰𑍇𑌕𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

ஜாதி, தேசம், காலம் இவைகளால் மறைக்கப்பட்ட (இடைவிட்ட) வாசனைகளுங்கூட அடுத்து (இப்போதே யநுபவிக்கும்படியாக) வெளிப்படும் தன்மையைப் பெறுகின்றன. ஸ்மிருதியும் ஸம்ஸ்காரமும் ஏக ரூபமாய் இருத்தலான்.

---

* பகவத்கீதை 4-ம் அத்., 20-ச்சு., 18-ம் அத், 17-ம் சுலோகங்களையும் பார்க்க.

குறிப்பு—"ஸ்வர்ககத்தில் தேவனாக இருந்து பெற்ற போகாதி வாஸனைகள், பின்பு அநேக ஆயிரம் ஜந்மங்களில் மனிதன் முதலான வர்க்கங்களில் பிறந்து அவைகளால் மறைக்கப் பெற்றாலும், மறுபடி தேவனாக ஏற்படுங் காலத்தில் அப்பூர்வ வாஸனைகள் எவ்விதம் திரும்ப வெளிப்படும்?" என்ற கேள்விக்கு இந்த சூத்திரம் விடையளிக்கின்றது.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்ற குறளுக்கிணங்க, தூங்கி விழித்தல் போலப் பிறப்பென்றால் ஒருவனுக்குத் தூங்குமுன் எந்த வாஸனை இருந்ததோ அது தான் விழிக்கிற காலத்தில் வெளிப்படுகிறது. அம்மாதிரியாக ஒரு ஜந்மத்தில் உண்டான வாஸனைகள், அதற்கடுத்த பின் ஜந்மத்தில் தானே மலரவேண்டும்? அவ்விதமின்றி அநேக ஜந்மங்களில் மறைவாகவிருந்து, பின்னர் எவ்விதம் அபிவ்யக்தி ஏற்படுமென்றால், அதற்கு அடியிற்கண்ட உதாஹரணம் ஸமாதாநமாகும். வெகு காலத்துக்குமுன் நடந்த ஸம்பவம் ஒன்று ஒருவனைப் பார்க்குங்கால் நம் ஸ்மரணைக்கு வருகிறது, அதற்கடுத்து வெகு சமீபகாலத்தில் நடந்த முக்கியமான விஷயங்கள் ஞாபகத்திற்கு வராமல் தடைபடுகின்றன என்பதை நாம் எல்லோரும் ஸ்வாநுபவத்தில் அறிகிறோம். அடுத்திருக்கிற விஷயங்கள் மறைபட்டு, முந்திய நாள் சென்ற விஷயம் எவ்விதம் பிராதுர்பாவத்தை யடைகிறதோ, அவ்விதமே பூர்வ வாஸனைகள் கர்ம பரிபாகத்தை யநுசரித்து வெளிப்படுகின்றன.

ஸ்மிருதி என்பது பிரகிருத அநுபவத்தின் வாஸனை. ஸம்ஸ்காரங்கள் பூர்வ ஜந்மங்களில் ஏற்பட்ட வாஸனைகள். இவையிரண்டும் ஒரே தன்மையனவாம். ஸம்ஸ்காரமானது வெளிப்படும் பக்ஷத்தில் ஸ்மிருதி போன்று வெளிப்படும். ஸ்மிருதியானது ஸம்ஸ்கார ரூபமாக லயப்படுகிறது. வேறு ஜந்மம், வேறு தேசம், வேறு காலம் இவைகளின் கண் நாம் இருந்து செய்த கர்மங்கள் ஸம்ஸ்கார ரூபமாக ஏற்படுகின்றன. அவைகளுங்கூட வெகு காலத்திற்குப் பின்னும் வேறு ஜாதி, வேறு தேசத்தில் நாம் பிறந்தாலும், அவைகள்

273

ஸ்ரீராமஜயம்.

## ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்.

தமிழ்வசனம்.

திருச்சினாப்பள்ளி. எஸ். பி. ஜி. காலேஜ் லெக்சரர்,

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.

அவர்களால் ஸுலபமான நடையில் மூலத்திற்கு ஸரியாய் மொழி பெயர்க்கப்பட்டது.

நேர்த்தியான கடிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏழு காண்டங்களும் ஸுமார் 3500 பக்கங்களில் 16 பாகங்களாக வெளியிடப்பட்டு, 4 வால்யூம்களாய், உயர்ந்த கலிக்கோ கில்ட் பைண்ட் செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

ஸெட்டின் விலை ரூ. 23—0—0. (தபால் சார்ஜ் வேறு)

### இங்கிலீஷ் வசனம்.

3 பாகங்கள் வெளியாயிருக்கின்றன. பாக்கி 13 பாகங்கள் இரண்டு மாஸத்திற்கு ஒருதரம் வெளிவரும்.

ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 1—8—0. (தபால் சார்ஜ் வேறு.)

## ஸாவித்ரீசரித்ரம்.

(பதிவ்ரதாமஹாத்மியம்)

ஸ்ரீமன் மஹாபாரதத்திலிருந்து, மொழிபெயர்க்கப்பட்டது. விலைஅணா 4.

நெ. 27 செட்டிமால் தெரு, திருச்சினாப்பள்ளி. } G. ஸ்ரீநிவாஸராகவையங்கார்.

---

## பெண்கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம் வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்குவிஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளேயாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0 தனிப்பிரதி 0-4-0 மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா லேபில் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி ரேவு தாயாரம்மா,
பத்திராதிபர், பெண்கல்வி, சென்னை.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

---

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

10. **பேதி மாத்திரைகள்:**—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம்,பித்தஉபத்திரவங்கள், சகல வாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கை, கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி சகல சுரங்கள் முதலியவைகளை சொஸ்தப் படுத்தும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. **ஜ்வா ஸம்ஹாரி:**—தீராத நாட்பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்தசுரம், அஸ்தி சுரம்,மாலை சுரம், மார்வலி காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலா முறை சுரம் முதலிய சகல சுரங்களை, அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

12. **உரோம ஸம்ஹாரி:**—இந்த சூரணத்தை மயிருள்ள இடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா4. ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் வி.பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

13. **சுகந்த பல்பொடி:**—நல்ல ஜீரண சக்தியைத்தரும், பல்வலி, எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷத சாலையின் ஹெட் ஆபீசை பரங்கிபேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும் இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.